# உங்களுடைய
# இறையியலைக் கட்டுதல்

**பாடம் 4**

## இறையியலில் அதிகாரம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ........ 1**

**இடைக்கால ரோம கத்தோலிக்கம் ........ 2**

**வேதாகமத்தின் அதிகாரம் ........ 2**

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் ........ 3

அர்த்தம் ........ 3

தெளிவின்மை ........ 6

**சபையின் அதிகாரம் ........ 7**

கடந்த கால அதிகாரங்கள் ........ 8

தற்கால அதிகாரங்கள் ........ 9

**ஆரம்பகால புராட்டஸ்டன்டிசம் ........ 11**

**வேதாகமத்தின் அதிகாரம் ........ 11**

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் ........ 11

அர்த்தம் ........ 14

தெளிவு ........ 17

**சபையின் அதிகாரம் ........ 20**

கடந்த கால அதிகாரங்கள் ........ 21

தற்கால அதிகாரங்கள் ........ 25

**தற்கால புராட்டஸ்டன்ட் அமைப்பு ........ 26**

**வேதாகமத்தின் அதிகாரம் ........ 27**

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் ........ 28

அர்த்தம் ........ 30

தெளிவு ........ 34

**சபையின் அதிகாரம் ........ 38**

கடந்த கால அதிகாரங்கள் ........ 38

தற்கால அதிகாரங்கள் ........ 42

**முடிவுரை ........ 45**

# முன்னுரை

அதிகாரங்களைப் பின்பற்றி நாம் எவ்வளவு நம் வாழ்க்கையை செலவிடுகிறோம் என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்ததுண்டா? இந்த நவீன உலகில் இதைச் சொல்வது விசித்திரமாகத் தெரிந்தாலும், அதுவே உண்மை. கார் பழுதடையும் போது, கார்களைப் பற்றி அதிகம் அறிந்த ஒருவரைத் தேடுகிறோம். நாம் நோய்வாய்ப்பட்டால், மருத்துவத்தில் ஒரு அதிகாரத்தைத் தேடுகிறோம். இந்த வல்லுநர்கள் கூறும் அனைத்தையும் நாம் ஏற்காமல் இருந்தாலும், இவை மற்றும் பிற சிக்கலான விஷயங்களை நாம் சொந்தமாகக் கையாள முயற்சிப்பதில்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், நாம் ஞானமுள்ளவர்களாக இருந்தால், சரியான அதிகாரங்களைக் கண்டுபிடித்து, அவைகள் சொல்வதைக் கவனமாகக் கேட்போம்.

கிறிஸ்தவ இறையியலிலும் இது போன்ற ஒன்று உண்மையாக இருக்க வேண்டும். பெரும்பாலும், நல்ல தேர்ந்த கிறிஸ்தவர்கள், இறையியலைக் கற்றுக்கொண்டு வாழ்வது தனிப்பட்ட விஷயம் என்றும், தங்களுக்கு அதிகாரங்களின் உதவி தேவையில்லை என்று நினைக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, எங்களிடம் வேதாகமம் மற்றும் தேவனுடனான தனிப்பட்ட உறவு உள்ளது. அது போதாதா? ஆனால் இந்தப் பாடத்தில் நாம் காண்பது போல், நாம் நமது இறையியலைக் கட்டியெழுப்பும்போது நமக்கு உதவ பல அதிகாரங்களை தேவன் நியமித்திருக்கின்றார்.

*உங்கள் இறையியலை உருவாக்குதல்* என்ற தொடரின் இந்த நான்காவது பாடத்திற்கு ”இறையியலில் அதிகாரம்” என்று தலைப்பிடப்பட்டுள்ளது. நம்முடைய இறையியலை உருவாக்கும்போது அதிகாரத்தைக் கண்டுபிடித்து பின்பற்றுவதில் உள்ள சில மையப் பிரச்சனைகளை நாம் ஆராய்வோம்.

சபை வரலாற்றின் மூன்று வெவ்வேறு காலகட்டங்களில் கிறிஸ்தவர்கள் இறையியலில் அதிகாரத்தைக் கையாண்ட விதங்களில் நம் கவனத்தைச் செலுத்துவோம். முதலாவதாக, இடைக்கால ரோம கத்தோலிக்கத்தில் இறையியல் அதிகாரம் பற்றிய கண்ணோட்டங்களைச் சுருக்கமாகக் கூறுவோம். இரண்டாவதாக, ஆரம்பகால புராட்டஸ்டன்ட் இயக்கத்தில் இறையியல் அதிகாரத்திற்கான அணுகுமுறையை ஆராய்வோம். மூன்றாவதாக, சமகால புராட்டஸ்டன்ட் இயக்கத்தில் இந்த விஷயங்களை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை ஆராய்வோம். கிறிஸ்தவ இறையியலில் அதிகாரம் பற்றிய இடைக்கால ரோம கத்தோலிக்க பார்வையை வைத்து நாம் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# இடைக்கால ரோம கத்தோலிக்கம்

ஒரு முந்தைய பாடத்தில், இந்தத் தொடர், சுவிசேஷ புராட்டஸ்டன்ட் (சீர்திருத்தத் திருச்சபை) இறையியலை நோக்கியுள்ளதாகக் கூறினோம். சபையின் புராட்டஸ்டன்ட் கிளைகள், இறையியலில் அதிகாரத்தை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள, இந்த மரபுகள் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்திலிருந்து எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பார்ப்பது முக்கியம். இப்போது, புராட்டஸ்டன்ட் சீர்திருத்தம் பல காரணங்களுக்காக நடந்தது. ஆனால் முக்கியக் காரணங்களில் ஒன்று, இடைக்கால ரோம கத்தோலிக்கத்தில் காணப்படும் மத அதிகாரக் கருத்துக்கள் பற்றிய சர்ச்சையாகும். இக்கண்ணோட்டங்களும் நடைமுறைகளும் இறையியலில் அதிகாரம் பற்றிய புராட்டஸ்டன்ட் கருத்துக்களுக்கு ஒரு முக்கியமான பின்னணியை உருவாக்கியது.

இடைக்கால ரோம கத்தோலிக்கத்தை நாம் ஆராயும்போது, இரண்டு தலைப்புகளை நாம் பார்ப்போம்: முதலாவதாக, இடைக்கால சபையில் வேதத்தின் அதிகாரம். இரண்டாவதாக, சபையின் அதிகாரம் பற்றிய பார்வை. இடைக்கால ரோம கத்தோலிக்கத் திருச்சபையில் வேதத்தின் அதிகாரம் பற்றி முதலில் பார்ப்போம்.

## வேதாகமத்தின் அதிகாரம்

சீர்திருத்தத்திற்கு முன்பே, சபையில் உள்ள வெவ்வேறு தனிநபர்கள் மற்றும் கட்டளைகள் வெவ்வேறு வழிகளில் வேதாகமத்தைக் கையாண்டன. ஆனால் பெரும்பாலான இடைக்கால இறையியலாளர்கள் குறைந்தபட்சம் கோட்பாட்டின் அடிப்படையிலாவது வேதத்தின் அதிகாரத்தை நம்பினர் என்று சொல்வது நியாயமானது. எப்படியாயினும், நடைமுறையில், இடைக்கால தேவாலயம் வேதாகமத்தைக் குறித்து ஒரு நிலைப்பாட்டை எடுத்தது. இது வேதத்தின் அதிகாரத்திற்கான இந்த உறுதிப்பாட்டின் மீது செயல்படுவதை கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக்கியது.

வேதத்தின் அதிகாரத்தைப் பற்றிய இடைக்கால சபையின் பிரச்சனையை நாம் ஆராயும்போது, மூன்று விஷயங்களைத் தொடுவோம். முதலாவதாக, இடைக்காலத்தில் வேதாகமத் தூண்டுதலின் தீவிரப் பார்வையை நாம் பரிசீலிப்போம். இரண்டாவதாக, வேதத்தின் பொருளைப் பற்றிய அதிகப்படியான கருத்துக்களைப் பார்ப்போம். மூன்றாவதாக, வேதத்தின் *தெளிவின்மை* பற்றிய மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களை ஆராய்வோம். வேதத்தின் தூண்டுதலின் இடைக்காலக் கண்ணோட்டத்தைப் பற்றி முதலில் சிந்திப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்

மொத்தத்தில், இடைக்காலக் கத்தோலிக்க இறையியலாளர்கள் வேதாகமம் முழுமையாக தேவனால் ஏவப்பட்டது என்றும் அது மனிதக் கருவிகள் மூலம் வந்தது என்றும் உறுதிப்படுத்தினர். இருப்பினும், துரதிருஷ்டவசமாக, சபை வரலாற்றின் இந்தக் காலகட்டத்தில், பல இறையியலாளர்கள் ஏவுதலைப் புரிந்துகொண்ட விதத்தில் அதீத நிலைக்குச் சென்றனர். வேதாகமத்தின் மனித மற்றும் வரலாற்றுத் தொடக்கம் புறக்கணிக்கப்படுவதற்கு அவர்கள் வேதாகமத்தின் தெய்வீகத் தொடக்கத்தை வலியுறுத்தினார்கள்.

வேதாகமத்தின் தெய்வீகத் தோற்றத்திற்கு இடைக்கால மிகைப்படுத்தல் பல காரணங்களுக்காக வந்தது. ஒன்று, இடைக்கால இறையியலாளர்கள் கிறிஸ்தவ இறையியலின் வகைகள் மற்றும் முன்னுரிமைகளை பல வழிகளில் வழிநடத்தும் நியோ-பிளாட்டோனிசம் மற்றும் அரிஸ்டாட்டிலியனிசம் போன்ற கிரேக்கத் தத்துவங்களைப் பெரிதும் சார்ந்துள்ளனர். இந்த தத்துவங்கள் தற்காலிக மற்றும் வரலாற்று உண்மைகளை விட நித்திய யதார்த்தங்களை மிகவும் அதிகமாக மதிப்பிட்டன. எனவே, கிறிஸ்தவ இறையியலாளர்கள், வேதாகமத்தின் வரலாற்று மற்றும் மனித தொடக்கம் அதன் பரலோகத் தொடக்கத்தை விட மிகக் குறைவே அவசியமானது என்று நினைக்கக் கற்றுக்கொண்டனர்.

இதற்கு அப்பால், இடைக்கால வேதாகம அறிஞர்கள் வேதாகம காலங்களின் பண்டைய வரலாற்றைப் பற்றி சற்றும் அறியாதவர்களாக இருந்தனர். இதனால் அவர்கள் தங்கள் இறையியலில் வேதாகம வரலாற்றுப் பின்னணியை நடைமுறையில் பயன்படுத்த முடியவில்லை. மாறாக, தங்களுக்குத் தெரிந்ததை அவர்கள் வலியுறுத்தினார்கள் - அதாவது பரலோகத்தின் நித்திய தேவன் வெளிப்படுத்திய காலவரையற்ற சத்தியங்கள் வேதாகமத்தில் உள்ளன என்றனர். மேலும் அவர்கள் மற்ற விஷயங்களைப் பெரிதும் குறைத்து மதிப்பிட்டனர்.

வேதாகமத்தின் ஏவுதல் பற்றிய இடைக்கால இறையியலாளர்களின் பார்வை மட்டுமே, வேதத்தின் முழு அதிகாரத்தையும் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்திய ஒரே விஷயம் அல்ல. வேதாகமத்தின் தெய்வீகத் தோற்றம் பற்றிய இடைக்கால சபையின் அழுத்தம், வேதத்தின் பொருளைப் பற்றிய துரதிர்ஷ்டவசமான நம்பிக்கைக்கு வழிவகுத்தது.

## அர்த்தம்

வேதாகமத்தின் பரலோக ஆரம்பம் காரணமாக, மற்ற புத்தகங்கள் செய்ததைப் போலவே வேதாகமும் அர்த்தத்தைத் தெரிவிக்கவில்லை என்று பரவலாகக் கருதப்பட்டது. மாறாக, தேவன் ஏவியதால், அர்த்தங்களால் வேதம் நிரம்பி வழிந்தது. அகஸ்டினைப் பின்பற்றிய பல இடைக்கால



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறையியலாளர்கள், வேதாகம உத்வேகத்தின் ஒரு ஆதாரம், வேதாகமத்தின் உரைகள் பன்மடங்கு அர்த்தங்களைக் கொண்டிருப்பதாக நம்பினர். கிறிஸ்துவக் கோட்பாட்டின் புத்தகம் 3, அத்தியாயம் 27ல் அகஸ்டின் கூறிய விதத்தைக் கவனியுங்கள்:

> வேதத்தின் ஒரே மாதிரி வார்த்தைகளின் மீது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விளக்கங்கள் கொடுக்கப்படும்போது, அதன் எழுத்தாளர் உத்தேசித்துள்ள அர்த்தம் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தாலும், எந்த ஆபத்தும் இல்லை... ஒரே மாதிரி வார்த்தைகள் பல அர்த்தங்களில் புரிந்து கொள்ளப்படுவதை விட, பரிசுத்த வேதாகமத்தின் விஷயத்தில் தாராளமான மற்றும் பயனுள்ள எந்த ஏற்பாட்டைத் தேவன் செய்திருக்க முடியும்?

பல வழிகளில், வேதாகமத்தைப் பற்றிய அகஸ்டினின் உயர்ந்த பார்வையை நாம் போற்றலாம். வேதாகமம் சாதாரண புத்தகம் அல்ல, மற்றும் அதன் அசாதாரண தன்மைகள் அதன் தெய்வீக ஏவுதலைச் சுட்டிக்காட்டுகின்றன. வேதாகமத்தின் பல அம்சங்களை அதன் எழுத்தில் தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட மேற்பார்வையின் அடிப்படையில் மட்டுமே விளக்க முடியும் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அகஸ்டினின் கண்ணோட்டம் இதை விட அதிகமாகத் தாண்டிச் சென்றது. தெய்வீக ஏவுதல் வேதாகமத்தில் உள்ள பகுதிகளை பல அர்த்தங்களை வெளிக்கொண்டு வந்தது என்று அவர் நம்பினார். எனவே, வேதாகமத்தின் மனித ஆசிரியர்கள் எதைச் சொல்ல விரும்புகிறார்கள் என்பதைப் பற்றி நாம் கவலைப்படுவதற்குப் பதிலாக, தேவன் உத்தேசித்துள்ள பல அர்த்தங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று அகஸ்டின் நம்பினார். நம்முடைய நோக்கங்களுக்காக, அகஸ்டினின் பார்வை மற்றும் ஏனைய தொடர்புடைய பார்வைகளை, ”கிளாசிக்கல் பாலிவேலன்ஸ்” என்று அழைப்போம். அதாவது வேதாகம நூல்கள் தேவனிடமிருந்து வருவதால் அவை பல நிலைகளில் அர்த்தங்கள் அல்லது மதிப்பைக் கொண்டுள்ளன என்ற நம்பிக்கையாகும்.

கிளாசிக்கல் பாலிவேலன்ஸின் மிகவும் பரவலாக அறியப்பட்ட விளக்கம் ஜான் காசியன் என்பவரால் பிரபலப்படுத்தப்பட்ட ”குவாட்ரிகா” (Quadriga) என்று அழைக்கப்படும் விளக்க அணுகுமுறை ஆகும். இந்த அணுகுமுறையில், ஒவ்வொரு வேதாகம உரையும் நான்கு தனித்துவமான அர்த்தங்களைக் கொண்டதாகப் பார்க்கப்பட வேண்டும். முதலாவதாக, உண்மையான உணர்வு என்பது ஒரு உரையின் எளிய அல்லது சாதாரண அர்த்தமாகும். இரண்டாவதாக, உருவக உணர்வு என்பது நூல்களை கோட்பாட்டு உண்மைக்கான உருவகங்களாக விளக்கியது. மூன்றாவதாக, டிராபோலாஜிக்கல் (tropological) அல்லது தார்மீக உணர்வு என்பது கிறிஸ்தவ நடத்தைக்கான நெறிமுறை வழிகாட்டுதல்களை உருவாக்கியது. நான்காவதாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனாகோஜிகல் (anagogical) உணர்வு என்பது, எஸ்காட்டனில் (eschaton) அல்லது கடைசி நாட்களில் தெய்வீக வாக்குத்தத்தங்களின் எதிர்கால நிறைவேறுதலைச் சுட்டிக்காட்டியது.

குவாட்ரிகாவின் விபரங்கள் மற்றும் கிளாசிக்கல் பாலிவலன்ஸின் பிற வெளிப்பாடுகள் நம்முடைய நோக்கங்களுக்கு அவசியமானவை அல்ல - பல எழுத்தாளர்கள் அவற்றைப் மற்ற இடங்களில் விளக்கியுள்ளனர். சீர்திருத்தம் ஏற்பட்ட காலத்தில், பெரும்பாலான கத்தோலிக்க இறையியலாளர்கள், வேதாகம நூல்களின் அர்த்தங்கள் சாதாரண அல்லது சாதாரண அர்த்தத்திற்கும் அப்பாற்பட்டு உள்ளதாக நம்பினர் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் குறிப்பிடத்தக்க வகையில், இந்த கூடுதல் அர்த்தங்கள் வேதாகம ஆசிரியர்கள் தெரிவிக்க விரும்பிய அர்த்தத்தில் வேரூன்றி இருக்கவில்லை என்று அவர்கள் நம்பினர். உண்மையில், ஒரு வேதபகுதியின் நேரடியான அல்லது தெளிவான உணர்வு, தீவிரமான இறையியல் விளக்கத்திற்கு மிகவும் அடிப்படையானதாகக் கருதப்படுகிறது. மாறாக, இறையியலாளர்கள் ஆழமான மறைந்திருக்கும் அர்த்தங்களை மதிப்பிட ஊக்குவிக்கப்பட்டனர். ஏனெனில் அவை சபைக்கு தேவனுடைய ஆழ்மனதை வெளிப்படுத்தின.

> எனவே, வேதாகமத்தின் பொருள் மறைந்துள்ளதா என்ற கேள்வி மிகவும் சுவாரசியமானது. ஏனென்றால் அதன் இருபுறத்தையும் நாம் மிகவும் கடினமாக எடுத்துக்கொண்டால் நமக்குப் பிரச்சனைகள் இருக்கும்...அவற்றில் ஒன்று, இந்த ஆழமான அர்த்தத்தை அது கொண்டுள்ள வேதாகமத்தின் மீது மதிப்பிடுவதற்கு அது உதவுகிறது. எனவே, அது வேதம் நேரடியாக வெளிப்படுத்துவதிலிருந்து நம்மை விலக்கி, ”சரி, ஆனால் வேறு என்ன அர்த்தம்?” என்பதை நோக்கி நம்மை இட்டுச் செல்லும்... இந்த ஆழமான அர்த்தம் மிக விரைவான ஒரு செயல்முறையாகும். இதன் மூலம் நம்மில் சிலரை சபைக்குள் உயர்த்த முடியும்... இடைக்கால சபையில் குருமார்கள், அடிப்படையில் மிக முக்கியமான மக்கள் குழுவாக மாறியதில் இதை நாம் சிறப்பாகக் காண்கிறோம். சாமானியர்கள் மேலோட்டமான அர்த்தத்தை மட்டுமே பார்க்க முடியும் என்பதால் வேதம் சாமானியர்களிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். ஆழ்ந்த பொருளைப் பார்க்கும் திறன், பயிற்சி, திறமை அவர்களிடம் இல்லை. நீங்கள் திரும்பிச் சென்று இடைக்கால இறையியலைப் பார்த்தால், அது இந்த ஆழமான உருவக வாசிப்புகளுக்குள் வெகுதூரம் சென்றுவிட்டது. மேலும் ஒவ்வொரு உரையிலும் பல அர்த்தங்கள் இருந்தன. ஆனால் பெரும்பாலான மக்களால் ஆழமானவற்றைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

– Dr. டிம் சான்ஸ்பரி

வேதத்தின் ஏவுதல் மற்றும் அர்த்தத்திற்கான இடைக்கால அணுகுமுறைகள் வேதத்தின் அதிகாரத்தின் மீது செயல்படுவதைக் கடினமாக்கியது. இந்த அணுகுமுறைகள் அதன் தெளிவின்மை என்கிற வேதத்தின் மற்றொரு பண்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வழிவகுத்தது. விசேஷமான மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நுண்ணறிவு கொண்டவர்களைத் தவிர, குறிப்பிடத்தக்க வகையில் தெளிவற்ற புத்தகமாகவே வேதாகமம் கருதப்பட்டது.

## தெளிவின்மை

சீர்திருத்தத்திற்கு முன்பு சராசரி கிறிஸ்தவர்களுக்கு வேதாகமத்தின் பொருளடக்கம் தெளிவாகத் தெரியவில்லை என்பது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. எழுத்தறிவு குறைவாக இருந்தது. வேதாகமங்கள் மிகவும் குறைவாக இருந்ததால், அதை யாரும் எளிதில் அணுக முடியவில்லை. மேலும், லத்தீன் மொழி வேதம் மற்றும் இறையியலின் முதன்மை மொழியாக இருந்தபடியால், பெரும்பாலும் உயர் கல்வியறிவு பெற்றவர்கள் மட்டுமே லத்தீன் மொழியை அதிகம் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு நன்கு புரிந்து கொண்டனர். எனவே, இன்று நம்மைப் போல மக்கள் வேதத்தைப் படிப்பது அரிதாக இருந்தது. குறிப்பிடத்தக்க வழிகளில் ஒரு சராசரி கிறிஸ்தவர் வேதத்தை நேரடியாக நம்புவதற்கு அது கிடைப்பதற்கரியதாகவும், தெளிவற்றதாகவும் கருதப்பட்டது.

சராசரி கிறிஸ்தவர்களுக்கு வேதம் மூடப்பட்டது மட்டுமல்லாமல், வேதாகமத்தைப் படிக்கும் திறனும் வாய்ப்பும் உள்ளவர்களுக்குக் கூட அவை தெளிவற்றதாகக் கருதப்பட்டது. இடைக்கால இறையியலாளர்களின் கூற்றுப்படி, தேவன் வேதாகமத்தில் பல அடுக்கு அர்த்தங்களை வைத்துள்ளார். அவை சாதாரணப் பார்வையில் இருந்து மறைக்கப்பட்டன.

மூடிய ஒரு பொக்கிஷப் பெட்டியைக் காட்டி, பெட்டியில் என்ன வகையான பொக்கிஷங்கள் இருந்தன என்பதை விவரிக்கும்படி யாராவது உங்களிடம் கேட்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். பொக்கிஷங்கள் மறைந்திருக்கும் என்பதால் பெட்டியில் என்ன இருந்தது என்பதை நிச்சயமாக அறிய முடியாது. இடைக்கால சபையில் வேதாகமத்திற்கும் இதுவே உண்மையாக இருந்தது.

சீர்திருத்தம் ஏற்பட்ட காலத்தில், வேதத்தின் தெளிவின்மை மீதான நம்பிக்கை, இறையியலின் வளர்ச்சியில் வேதத்திற்கு நடைமுறை அல்லது உண்மையான அதிகாரம் இருப்பதைக் கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக்கியது. கோட்பாட்டில், வேதாகம கிறிஸ்தவ இறையியலுக்கான தேவனால் ஏவப்பட்ட பொக்கிஷமாக இருந்தது. ஆனால் எல்லா நடைமுறை நோக்கங்களுக்காகவும், வேதாகமம் மூடப்பட்டே இருந்தது. அது மிகவும் தெளிவற்றதாக இருந்ததால்,

இறையியலாளர்களை அவர்களின் பணியில் அதனால் வழிநடத்த முடியவில்லை.

> இடைக்கால சபையில், பெரும்பாலான விசுவாசிகள் வேதத்தில் தேவனுடைய முழு நோக்கமும் நான்குமுனை அணுகுமுறையின் மூலம் அறியப்பட்டதாக உறுதிப்படுத்தினர்: இலக்கியத்தைப் பின்பற்றும் ஒழுக்கம், அனாகோஜிக் மற்றும் உருவகம் என்பவைகளே அவை. எனவே, பதினாறாம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதிகள் - நம்மில் பெரும்பாலோரால் "புராட்டஸ்டன்ட்டுகள்" என்று அழைக்கப்படுபவர்கள் - கோட்பாட்டில் ஒரு பகுதியில் இதை எதிர்த்தார்கள். விசேஷமாக அதிலிருந்து வெளிவந்தது, சில சமயங்களில், வேதத்தின் சிதைவு என்று அவர்கள் உணர்ந்த கற்பித்தலின் பாரம்பரியமாக இருந்தது. அல்லது அது சபை அதிகாரத்திற்கு ஆதரவாக, வேதாகமத்தின் உண்மையான அல்லது அதிகாரப்பூர்வ நோக்கத்தை மறைத்தது.
>
> – Dr. ஜேம்ஸ் டி. ஸ்மித் III

வேதத்தின் அதிகாரம் பற்றிய இடைக்கால ரோம கத்தோலிக்கக் கண்ணோட்டத்தை மனதில் கொண்டு, நாம் இரண்டாவது பரிசீலனைக்குத் தயாராக இருக்கிறோம்: இடைக்கால சபையில் திருச்சபை இறையியலின் அதிகாரம் என்பதே அது.

## சபையின் அதிகாரம்

வேதத்திலுள்ள ஏவுதல், பொருள் மற்றும் தெளிவின்மை ஆகியவற்றின் இடைக்காலக் கோட்பாட்டால் எழுப்பப்பட்ட பிரச்சனைகள் ஒரு தீவிரமான கேள்விக்கு வழிவகுத்தன. விசுவாசிகள் வேதத்தைத் தாங்களாகவே கையாள முடியாதபோது, வேதத்திற்கு விசுவாசிகள் மீது எப்படி அதிகாரம் இருக்க முடியும்? இடைக்கால சபை, திருச்சபை அதிகாரிகளை வேதத்தின் மொழிபெயர்ப்பாளர்களாக உயர்த்துவதன் மூலம் இச்சிக்கலைச் சமாளிக்க முயன்றது. இதன் விளைவாக, சபை அதிகாரம் வேதத்துக்குச் சமமாகக் கருதப்பட்டது.

சபையின் அதிகாரத்திற்கான இந்த சிறப்புப் பாத்திரத்தைப் புரிந்து கொள்ள, நாம் இரண்டு வகையாகப் பார்ப்போம். முதலாவதாக, இடைக்கால இறையியலாளர்கள் முந்தைய திருச்சபை அதிகாரிகளை எவ்வாறு புரிந்துகொண்டார்கள்? இரண்டாவதாக, சமகால இடைக்கால திருச்சபை அதிகாரிகளை அவர்கள் எவ்வாறு புரிந்துகொண்டார்கள்? கடந்த காலத்தில் இருந்த சபையின் அதிகாரத்தை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## கடந்த கால அதிகாரங்கள்

சீர்திருத்தத்தின் போது கத்தோலிக்கத் திருச்சபை, கடந்த காலத்திலிருந்து திருச்சபை அதிகாரத்திற்கான ஒரு விரிவான அணுகுமுறையை உருவாக்கியது. நிச்சயமாக, வேதவசனங்கள் சபைப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டன. இருப்பினும், நாம் பார்த்தபடி, இடைக்காலத்தில், மற்ற வழிகாட்டுதல் ஆதாரங்கள் தேவைப்படும் அளவிற்கு வேதத்தின் போதனைகள் மிகவும் தெளிவற்றதாக கருதப்பட்டது. இதன் விளைவாக, இடைக்கால இறையியலாளர்கள் தாம் எதை நம்ப வேண்டும் என்பதைத் தீர்மானிக்க திருச்சபை இறையியலின் வரலாற்றைப் பார்த்தனர். அவர்களில் பெரும்பாலோர் சபையின் வரலாற்றைத் தேவன் தமது ஜனங்களைச் சத்தியத்தின் வழிகளில் வழிநடத்திய வரலாற்றைக் கண்டனர். இந்த காரணத்திற்காக, கடந்த காலத்தில் திருச்சபை கற்பித்தது, இடைக்கால இறையியலாளர்களுக்கு குறைந்தது இரண்டு வழிகளிலாவது முக்கிய அக்கறை இருந்தது.

ஒருபுறம், ஆரம்பகால திருச்சபைப் பாதிரியார்களுக்கு அதிகக் கவனம் கொடுக்கப்பட்டது. பாலிகார்ப், இக்னேஷியஸ், ஐரேனியஸ், டெர்டுல்லியன் மற்றும் ஜஸ்டின் மார்டிர் போன்ற மனிதர்களின் எழுத்துக்கள் மற்றும் பிற்காலப் பாதிரியார்களான அகஸ்டின், அதானசியஸ் மற்றும் ஜெரோம் போன்றவர்களின் எழுத்துக்கள் சபையில் வெவ்வேறு ஒழுங்குகளின் நம்பிக்கைகளை ஆழமாகப் பாதித்தன. இப்போது, இந்த பாதிரியார்கள் பொதுவாக தவறு செய்ய முடியாதவர்களாகக் கருதப்படவில்லை. மேலும் திருச்சபையின் வெவ்வேறு கிளைகள் பேட்ரிஸ்டிக் பாரம்பரியத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆதரிக்கின்றன. ஆயினும்கூட, கடந்த காலத்தின் இந்த சிறந்த இறையியலாளர்களுக்கு தேவன் சிறப்பான ஞானத்தை வழங்கியுள்ளார் என்றும், அவர்களின் போதனைகளுக்கு சபை சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இன்னமும் கருதப்பட்டது. சபையின் ஆரம்பகால பிதாக்களிடமிருந்து சில வகையான ஆதரவு இல்லாமல், இடைக்கால இறையியலாளர்கள் இறையியல் வலியுறுத்தல்களைச் செய்ததில்லை.

மறுபுறம், இடைக்கால தேவாலயம் நைசியா ஆலோசனைக் குழு, கான்ஸ்டான்டினோபிள் ஆலோசனைக் குழு மற்றும் சால்சிடன் ஆலோசனைக் குழு போன்ற சபையின் எக்குமெனிகல் ஆலோசனைக் குழுக்களை இன்னும் அதிகமாகச் சார்ந்துள்ளது. இந்த மற்றும் ஏனைய ஆலோசனைக் குழுக்களின் கண்டுபிடிப்புகள் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. எல்லா நடைமுறை நோக்கங்களுக்காகவும், இடைக்கால இறையியலாளர்கள் இந்த கண்டுபிடிப்புகளை வேதாகமப் போதனையின் சுருக்கமாகச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கருதினர். அவைகளுடன் உடன்படாதது வேதவாக்கியங்களுடனும் கிறிஸ்துவுடனும் உடன்படாததற்குச் சமமாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பல நூற்றாண்டுகளுக்குப் பின், பாதிரியார்களின் பல போதனைகள் மற்றும் எக்குமெனிகல் ஆலோசனைக் குழுக்களின் கண்டுபிடிப்புகள் அதிகாரப்பூர்வ திருச்சபை மரபுகளாக வளர்ந்தன. இந்த மரபுகள் உறுதியானதால், அவை சபையின் விரிவான கோட்பாட்டை உருவாக்க உதவியது. இந்த திருச்சபைக் கோட்பாடு ஒரு மனிதனாலான, தவறுதலான இறையியல் என்று கருதப்படாமல், வேதாகமத்தின் அதே அதிகாரத்தைக் கொண்ட இறையியல் எனப்பட்டது. உண்மையில், அனைத்து செயல்முறை நோக்கங்களுக்காக, தேவாலயத்தின் கோட்பாடு வேதத்தின் இடத்தைப் பிடித்தது. சீர்திருத்தத்திற்கு முன், உண்மையுள்ள கிறிஸ்தவர்கள், “வேதம் என்ன சொல்கிறது?” என்று கேட்பார்கள் என்று எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் ”திருச்சபை என்ன சொன்னது?” என்றே கேட்கும்படி எதிர்பார்க்கப்பட்டனர்.

இடைக்கால தேவாலயத்தின் அதிகாரத்தைப் புரிந்துகொள்வது கடந்த கால திருச்சபை அதிகாரிகளுக்கு எவ்வளவு முக்கியமோ, அந்த நேரத்தில் வேதத்தின் கோட்பாடும், சமகால இறையியல் அதிகாரிகளின் மேலான பார்வைக்கான தேவையை உருவாக்கியது.

## தற்கால அதிகாரங்கள்

நிச்சயமாக சபையானது கோட்பாட்டின் வேதாகம அதிகாரத்தை தொடர்ந்து உறுதிப்படுத்தியது. ஆனால் கடந்த காலத்தில் தீர்க்கப்படாத சமகாலப் பிரச்சனைகளில் சபையை வழிநடத்த வேதம் மிகவும் தெளிவற்றதாக இருந்தது. எனவே, அவர்களின் தற்போதைய இறையியல் சர்ச்சைகளில் சபை எவ்வாறு வழிகாட்டுதலைக் காண வேண்டி இருந்தது? எளிமையாகச் சொன்னால், இடைக்கால இறையியலாளர்கள், சபையின் வரிசைமுறையில் வாழும் அதிகாரிகளின் அமைப்பைத் தேவன் நிறுவியதாக நம்பினர். இந்த வரிசைமுறையானது கிறிஸ்துவின் சரீரத்திற்கு சந்தேகத்திற்கு இடமில்லாத போதனையை வழங்கியது. தற்போதைய சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான அதிகாரம் பாதிரியார்கள், பேராயர்கள் மற்றும் (சபையின் தவறு செய்ய முடியாத தலைவர் என்று பலர் கருதிய) போப் ஆகியோரிடம் உள்ளது. ஒரு இறையியல் முடிவு தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கும் போது, “வேதம் என்ன சொல்கிறது?” என்று கேட்க விசுவாசிகள் ஊக்குவிக்கப்படவில்லை. மாறாக, “தேவாலயத்தின் அதிகார வரிசைமுறை என்ன சொல்கிறது?” என்று கேட்கும்படி அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இடைக்காலத்தில், அவர்கள் வேதாகமத்தின் அர்த்தத்தைப் பற்றி ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தனர்.

> ஆனால் அவர்கள் விமர்சனத்திற்கு முந்தைய வேத விளக்கத்தின் அடிப்படையில் (hermeneutics) உடன் செயல்பட்டனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர்கள் சபைப் பாரம்பரியமே வேதத்தின் போதனைகள் என்ற அடிப்படை நம்பிக்கையுடன் வேதத்தை அணுகுகிறார்கள். இப்போது, இருபத்தியோராம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நூற்றாண்டின் புராட்டஸ்டன்ட்டுகளாகிய நாம் அதைப் பார்த்து சிரித்துக்கொள்வது மிகவும் எளிதானாலும், நாமும் அதிலிருந்து விடுபடவில்லை. ஜான் கால்வின், ஜான் வெஸ்லி, மார்ட்டின் லூதர் அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி அவர்களின் போதனையே வேத போதனை என்று ஒடிக் கொண்டிருக்கும் நம்மவர்கள் ஏராளம். எனவே, இடைக்காலத்தில் என்ன நடக்கிறது என்றால், அவர்கள் விசுவாச ஆட்சியின் இயக்கவியலில் அடித்தளமாக இருக்கும் வேதத்தை விளக்குவதற்கான அணுகுமுறையைச் செய்கிறார்கள். இடைக்கால மொழிபெயர்ப்பாளர்கள் கேட்கும் கேள்வி என்னவென்றால், "அப்போஸ்தலர்களால் வழங்கப்பட்ட விசுவாசம் இந்த வேதபகுதியின் விவரங்கள் மூலம் நமக்கு எவ்வாறு வெளிப்படுகிறது?" … நம்மிடம் உள்ள பிரச்சனை என்னவென்றால், ஆரம்பகால சபைப் பாரம்பரியத்தை பார்த்த விதம் மற்றும் இடைக்கால காலத்திலும் பைசண்டைன் பாரம்பரியத்திலும் அந்த வகையான மிகைப்படுத்தல்கள் இருந்த விதம் …உண்மையில், சீர்திருத்தத்தின் தேவை, விசுவாச ஆட்சியின் குறைந்தபட்சக் கட்டுமானத்திற்குத் திரும்புவதாகும்… சீர்திருத்தவாதிகள் வேதத்தை வாசிப்பதில் உள்ள நம்பிக்கையின் விதியிலிருந்து விடுபட விரும்பவில்லை. அவர்கள் அதை அதன் சரியான அளவுக்குத் திரும்பக் கொண்டுவர எண்ணினர். அது இறுக்கமாக இருந்தது.
>
> – Dr. கேரி வின்ஸான்ட்

தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரே வழி திருச்சபை அதிகாரிகளால் மட்டுமே என்றால், சாதாரண கிறிஸ்தவர்கள் வேதத்தின் மேல் கவனம் செலுத்துவதற்கு எந்த நல்ல காரணமும் இல்லை. இவ்வாறு, வேதம் அல்லாமல், திருச்சபையின் அதிகாரப்பூர்வ வரிசை நிலையே, சமகால இறையியலுக்குத் தவறான வழிகாட்டியாக மாறியது.

இடைக்கால ரோம கத்தோலிக்கத்தின் கருத்துக்களை மனதில் கொண்டு, ஆரம்பகால புராட்டஸ்டன்டிசத்தின் கண்ணோட்டத்தை பாராட்ட வேண்டிய நிலையில் நாம் இப்போது இருக்கிறோம். ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் இறையியலில் வேதாகம மற்றும் திருச்சபை அதிகாரத்தை எவ்வாறு புரிந்து கொண்டனர்?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# ஆரம்பகால புராட்டஸ்டன்டிசம்

ஜான் ஹஸ், பீட்டர் வால்டோ, ஜான் விக்லிஃப் மற்றும் ஜிரோலாமோ சவோனரோலா போன்ற சீர்திருத்தத்திற்கு முந்தைய நபர்களாக நாம் அடிக்கடி விவரிக்கும் ஆரம்பகால புராட்டஸ்டன்ட்டுகள் உட்பட - அவர்களின் நாட்களில் சபை அதிகாரிகள் செய்த பல முறைகேடுகளைக் கண்டனர். சபையின் மீது வேதத்தின் நடைமுறை அதிகாரத்தை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் அவர்கள் இந்த மீறல்களை நிவர்த்தி செய்தனர். அவர்கள் வேதத்தை மக்களின் மொழிகளில் மொழிபெயர்த்தனர். அதிக எண்ணிக்கையில் வேதாகமங்களை அவர்கள் வெளியிட்டனர். ஜனங்கள் வேதத்தை வாசிக்கும் வகையில் அவர்கள் எழுத்தறிவை ஊக்குவித்தார்கள். அவர்கள் உள்ளூர் போதகர்களையும் அவர்களைப் பின்தொடர்ந்த சபை மக்களையும் தாங்களாகவே வேதத்தை வாசிக்கும்படி உற்சாகப்படுத்தினார்கள். இந்த முயற்சிகள் சபையில் உள்ள ஒவ்வொரு இறையியல் பிரச்சனையையும் தீர்க்காது என்பதை புராட்டஸ்டன்ட்கள் விரைவில் அறிந்து கொண்டனர். ஆனால் பழைய, புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் மற்றும் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, அவர்கள் வேதத்தின் அதிகாரத்தைச் சரியாக மீண்டும் உறுதிப்படுத்தினர்.

வேதத்தினுடைய அதிகாரத்தின் ஆரம்பகால புராட்டஸ்டன்ட் பார்வையை முதலில் பார்ப்போம். அதன்பின் திருச்சபை அதிகாரத்தைப் பற்றிய புராட்டஸ்டன்ட் பார்வையை நாம் ஆராய்வோம். வேதத்தின் அதிகாரத்தைப் பற்றிய புராட்டஸ்டன்ட் கண்ணோட்டத்தை முதலில் கருத்தில் கொள்வோம்.

## வேதாகமத்தின் அதிகாரம்

நாம் பார்த்தபடி, வேதாகமத்தின் அதிகாரத்தைப் பற்றிய இடைக்கால கத்தோலிக்கக் கண்ணோட்டம் பல மட்டில்லாத பார்வைகளால் தடைபட்டது. ஆரம்பகால புராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகள் வேதத்தின் ஏவுதல், பொருள் மற்றும் தெளிவு ஆகியவற்றின் கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்து இப்பிழைகளுக்குப் பதிலளித்தனர். முதலில் வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் என்கிற கோட்பாட்டைக் கவனியுங்கள்.

### வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்

ஆரம்பத்திலிருந்தே, இடைக்கால இறையியலாளர்களைப் போலவே, சீர்திருத்தவாதிகளும் வேதவாக்கியங்கள் தெய்வீக மற்றும் மனிதத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தோற்றங்களைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்துகொண்டனர் என்று நாம் சொல்ல வேண்டும். ஒரு புறம், வேதாகமத்தை தேவனிடமிருந்து வந்த ஒரு அசாதாரண புத்தகமாக அவர்கள் பார்த்தார்கள். லூதர், ஸ்விங்லி மற்றும் கால்வின் ஆகியோர், தெய்வீக ஏவுதலின் மூலம் வேதாகமம் தேவனுடைய மக்களுக்கு வந்திருக்கிறது என்பதை நிச்சயமான சொற்களில் உறுதிப்படுத்தினர். 2 தீமோத்தேயு 3:16 இல் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை அவர்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டார்கள்:

> வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16).

இந்த வேத பகுதி போதிக்கிறது போல, வேதாகமம் தேவனிடமிருந்து வந்ததாக இருக்கிறது, மற்றும் முழுமையாக நம்பகமான விசேஷித்த வெளிப்பாட்டை தேவனுடைய மக்களுக்கு வழங்குவதற்காக வேத வாக்கியங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

> பரந்த அர்த்தத்தில் பரிசுத்த ஆவியின் ஏவுதலைப் பற்றிப் பேசும்போது தேவன் பேச விரும்பியதை வார்த்தைகளில் துல்லியமாக எழுத மனித எழுத்தாளர்களை ஆவியானவர் வழிநடத்துவதாகும். எனவே இறையியல் சொல்லான ”சங்கமம்” அதாவது, உங்களிடம் மனித மற்றும் தெய்வீக இயல்பாடு இரண்டும் இருப்பதைக் குறிக்கிறது. நிச்சயமாக, அது வேறுபடுகிறது. சில நேரங்களில் அதில் தெய்வீக ஈடுபாடு வெளிப்படையாக இருக்கிறது. மற்ற நேரங்களில் மனிதனுடைய ஈடுபாடு மிகவும் வெளிப்படையாக தெரிகிறது … இன்னும், மிகவும் சரியாக சொன்னால், தேவன் அந்த மனித ஆசிரியரைப் பயன்படுத்துகிறார், அசல் கையெழுத்துப் பிரதியின் வார்த்தைகளில் வார்த்தைகள் இருக்கின்றன, தேவன் தொடர்பு கொள்ள விரும்பியதை எழுதுவதற்கு அந்த மனித ஆசிரியரை எழுத வைத்து அதை மேற்பார்வையிடுகிறார். எனவே, 2 தீமோத்தேயு 3:16 யைக் கவனியுங்கள், வேத வாக்கியங்கள் தேவனால் ஏவப்பட்டன, அல்லது தேவனுடைய வார்த்தையை ”தேவன் வெளி சுவாசித்தார்,” இதற்கு கிரேக்க வார்த்தையான ”தேயோப்நிஸ்டோஸ்” பயன்படுத்தப்பட்டுள்ளது… ஆகவே தேவ ஆவியினால் வேதம் அருளப்படுதல் என்பதற்கு இது தான்

> அர்த்தமாகும். இன்னும், அது அதிகாரப்பூர்வமானதாகவும் முழுமையானதாகவும் வாய்மொழியாகவும் உள்ளது. இதில் மறுபடியும் மனித மற்றும் தெய்வீக ஈடுபாடுகள் உள்ளன, மற்றும் அது பிழை இல்லாமல் உள்ளது. நாம் அதை எல்லா வழிகளிலும் நம்பலாம்.
>
> – Dr. ஜே. ஸ்காட் ஹோரல்

தேவனுடைய கரமானது வேதாகமத்தை பிழையிலிருந்து பாதுகாக்கிறது என்று சீர்திருத்தவாதிகள் நம்பினார்கள். தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்டு வேதாகம எழுத்தாளர்களுக்கு நிகழ்காலம், கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய தகவல்களைக் கொடுத்தார், மேலும் அவர்கள் எழுதிய அனைத்தும் உண்மையாக இருக்கும்படியாக அவர்களின் எழுத்தாளர் பதவியை அவர் மேற்பார்வையிட்டார். மிக முக்கியமாக, தெய்வீக ஏவுதலானது வேதாகமத்திற்கு முழுமையான, கேள்விக்கிடமற்ற அதிகாரத்தைக் கொடுத்தது.

ஆனால் வேதாகமத்தை எழுதியவர்கள் வேதாகமத்தின் உள்ளடக்கத்திற்கும் அர்த்தத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்தார்கள் என்பதை ஒப்புக்கொள்வதன் மூலம் இடைக்கால திருச்சபையின் தவறுகளை புராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகள் தவிர்த்தனர். வேதாகமத்தை அது பரலோகத்திலிருந்து கீழே விழுந்ததைப் போல நடத்துவதற்குப் பதிலாக, ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் வேதாகமம் மனித கருவிகள் மற்றும் வரலாற்று நிகழ்ச்சிப்போக்குகள் மூலம் வந்தது என்று வலியுறுத்தினர். மனித எழுத்தாளரைப் பற்றிய இந்தக் கவலை, இயேசுவும் வேதாகம எழுத்தாளர்களும் அடிக்கடி வேதாகமத்தை அணுகிய விதத்தோடு ஒத்துப்போகிறது. உதாரணமாக, மத்தேயு 22:41-44 இல் நாம் இந்த பதிவை வாசிக்கிறோம்:

> பரிசேயர்கள் கூடிவந்தபோது, இயேசு அவர்களிடம் ”கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்கிற ஒரு கேள்வியைக் கேட்டார். அவன் யாருடைய மகன்?” அதற்கு அவர்கள், இவர் ”தாவீதின் குமாரன்” என்றார்கள். “‘நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே’? என்று தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி?” என்று இயேசு அவர்களிடம் கேட்டார் (மத்தேயு 22:41-44).

இந்த வேத பகுதியில் இயேசு சங்கீதம் 110:1ஐப் பயன்படுத்தி பரிசேயர்களை குழப்பி, இந்தப் பகுதியின் மனித எழுத்தாளரான தாவீதின் கவனத்தை

வெளிப்படையாக ஈர்த்தார். மேசியா தாவீதின் வழித்தோன்றலாக இருப்பார் என்று இயேசுவும் பரிசேயரும் ஒப்புக்கொண்டனர். ஆனால் முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்தில், தாவீது சாதாரணமாக தனது வழித்தோன்றலை "கர்த்தர்" என்று அழைத்திருக்க மாட்டார். எனவே, தாவீது ஏன் இந்தப் பட்டத்தைத் தன் குமாரனுக்குக் கொடுத்தான் என்பதை விளக்கும்படி இயேசு பரிசேயர்களிடம் கேட்டார்.

இயேசுவின் வாதமானது வேதாகமத்தின் அர்த்தம் அதன் எழுத்தாளர்களின் வாழ்க்கையில் உள்ள விவரங்களை ஓரளவு நம்பியுள்ளது என்ற உண்மையைச் சார்ந்திருந்தது என்பதைக் கவனியுங்கள். மோசே, ஏசாயா, எரேமியா, தாவீது, பவுல் மற்றும் தேவனுடைய வார்த்தையின் பிற மனித கருவிகளைக் குறிப்பிடும் வேதாகம எழுத்தாளர்களும் பாத்திரங்களுமாகிய இதைப் போன்ற உதாரணங்கள் ஏராளமாக உள்ளன. இந்த மனிதக் கருவிகள் வேதாகமத்திற்கு கணிசமான தனிப்பட்ட பங்களிப்புகளைச் அளித்தன.

இந்த உதாரணங்களிலிருந்தும் மற்ற உதாரணங்களிலிருந்தும், வேதவாக்கியங்கள் உண்மையான மனிதச் சூழ்நிலைகளிலிருந்து எழுந்தன என்ற முடிவுக்குச் சீர்திருத்தவாதிகள் சரியான முடிவுக்கு வந்தனர். மேலும் அவை குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலைகளுக்காக மக்களால் எழுதப்பட்டன. கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை சரியாகப் புரிந்துகொண்டால், அவர்கள் வேதாகமத்தின் தெய்வீகத் தோற்றங்களை மட்டுமல்ல, அவற்றின் மனித, வரலாற்றுத் தோற்றங்களையும் வலியுறுத்த வேண்டும்.

வேதாகமத்தின் அதிகாரம் பற்றிய ஆரம்பகால புராட்டஸ்டன்ட்களின் பார்வை வேதாகமம் அருளப்படுதலில் தெய்வீக மற்றும் மனித பங்களிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தது. உத்வேகம் பற்றிய இந்தக் கண்ணோட்டமானது, வேதவாக்கியத்தின் அர்த்தத்தைப் பற்றி சீர்திருத்தவாதிகளுக்கு இருந்த சிந்தனை வழிகளையும் கணிசமாகப் பாதித்தது.

## அர்த்தம்

வேதாகமத்தின் அர்த்தத்திற்கு ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் கொண்டிருந்த அணுகுமுறையை நாம் இந்த வழியில் சுருக்கமாகக் கூறலாம்: வேதாகமத்தில் மறைந்திருக்கும் தெய்வீக அர்த்தங்களைத் தேடுவதன் மூலம் இடைக்கால ரோம கத்தோலிக்கத்தின் மாதிரியைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, சீர்திருத்தவாதிகள் தங்கள் வியாக்கியானங்கள் அனைத்தையும் வேதாகம நூல்களின் நேரடியான அர்த்தத்தில் அடிப்படையாகக் கொள்ள முயன்றனர். எளிமையாகச் சொல்வதானால், மனித எழுத்தாளர்கள் தங்கள் அசல் வாசகர்களுடன் தொடர்பு கொள்ள உத்தேசித்துள்ள அர்த்தத்தில் அவர்கள் கவனம் செலுத்தினர்.

ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் வேதாகமத்தின் அர்த்தத்திற்கான இடைக்கால அணுகுமுறைகளிலிருந்து முற்றிலுமாக முறித்துக்

கொள்ளவில்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். சில நேரங்களில், செவ்வியல் பலபடித் தன்மையின் எச்சங்கள், அதாவது வேதவாக்கியங்கள் பல அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றன என்ற நம்பிக்கையானது சீர்திருத்தத்தின் எழுத்துக்களில் தோன்றின. எடுத்துக்காட்டாக, சங்கீதம் பற்றிய லூதரின் வர்ணனை, இந்த வியாக்கியானத்தின் முறையைத் தொடர்ந்து சார்ந்திருப்பதைக் காட்டுகிறது. ஆயினும்கூட, சீர்திருத்தவாதிகள் தங்கள் கத்தோலிக்க சகாக்களில் பெரும்பாலானவர்களை விட மனித எழுத்தாளரின் நோக்கம் கொண்ட அர்த்தத்திற்கு தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளித்தனர் என்று சொல்வது நியாயமானது. மேலும், பெரும்பாலும், அவர்கள் வேதப்பூர்வ வேத பகுதிகளின் பல பயன்பாடுகளை வேத பகுதியின் அசல் அர்த்தத்தில் அடித்தளமாகக் கொண்டிருந்தனர்.

வேத பகுதிகளின் தெளிவான அர்த்தத்தை ஆரம்பகால சீர்திருத்தவாதிகள் வலியுறுத்தலைப் புரிந்துகொள்ளுதல் சில வரலாற்றை நினைவுகூர உதவுகிறது. வேதவாக்கியத்திற்கான இந்த வியாக்கியானவியல் அல்லது வியாக்கியானமான அணுகுமுறை ஏற்கனவே 15 ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சியின் மூலம் மேற்கு ஐரோப்பாவில் வேரூன்றியிருந்தது. மறுமலர்ச்சி அல்லது ”மறுபிறப்பு” என்பது அதன் பெயரை பாரம்பரிய ரோம மற்றும் குறிப்பாக, சீர்திருத்தத்திற்கு முன்னர் மேற்கு ஐரோப்பாவில் நடந்த கிரேக்க இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தின் மீதான புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்திலிருந்து பெறுகிறது. மறுமலர்ச்சிக்கு முன்னர், பெரிய மற்றும் சிறிய அறிஞர்கள் கிரேக்கத்தின் பண்டைய எழுத்துக்களை மொழிபெயர்ப்பில் மட்டுமே அறிந்திருந்தனர். இந்த எழுத்துக்களின் வியாக்கியானங்கள் பெரும்பாலும், சபையினுடைய மேற்பார்வையின் கீழ் இருந்தன. வெவ்வேறு காலங்களில், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் மற்றும் பிற கிரேக்க எழுத்தாளர்களை வேண்டுமென்றே கிறிஸ்தவக் கோட்பாட்டை ஆதரித்த வழிகளில் சபையானது வியாக்கியானம் செய்தது. ஆனால் மறுமலர்ச்சிக் காலத்தில், பல அறிஞர்கள் திருச்சபை மேற்பார்வையிலிருந்து விடுபட்ட, செவ்வியல் காலகட்டத்தின் வேத பகுதிகளைப் புரிந்துகொள்வதற்கான தங்கள் விருப்பத்தை ஆதரித்த புரவலர்களைக் கண்டனர். இந்த எழுத்துக்களை அவற்றின் எழுத்தாளர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்தியதால் அவர்கள் இந்த எழுத்துக்களை வியாக்கியானம் செய்யத் தொடங்கினர். இதன் விளைவாக, மிகவும் மதிப்புமிக்க செவ்வியல் இலக்கியத்தின் விளக்கங்கள் அவற்றின் வரலாற்று அர்த்தத்தில் கவனம் செலுத்தத் தொடங்கின. இந்த அர்த்தமானது பெரும்பாலும் சபையின் போதனைகளுடன் கூர்மையான முரண்பாடாக இருந்தது.

இப்போது, மறுமலர்ச்சிக் காலத்திலும், எபிரெய மற்றும் கிரேக்க வேதாகமங்களின் புதிய பதிப்புகள் வெளியிடப்பட்டன. இது வேதாகமத்தின் வியாக்கியானத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு வழிவகுத்தது. நாம் பார்த்தபடி, இந்த நாட்களுக்கு முன்பு, வேதாகம பகுதிகள் பெரும்பாலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சபையின் வழிகாட்டுதலின் கீழ் மற்றும் சபைக் கோட்பாட்டின் ஆதரவுடன் வியாக்கியானம் செய்யப்பட்டன. ஆனால் மறுமலர்ச்சியின் கொள்கைகளைப் பின்பற்றி, பல வேத அறிஞர்கள் - குறிப்பாக புராட்டஸ்டன்ட்கள் - சபையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கினர். அவர்கள் வேதவசனங்களைப் பற்றிய தங்கள் வியாக்கியானங்களை அசல் வரலாற்று அர்த்தத்தில் அடிப்படையாகக் கொள்ள முயன்றனர். அனைத்து வியாக்கியானங்களுக்கும் அடிப்படையாக அசல் அர்த்தத்தை நோக்கிய இந்த புராட்டஸ்டன்ட் நோக்குநிலை அல்லது "நேரடியான உணர்வு" வேதாகமத்தின் அர்த்தத்தை புரிந்துகொள்வதில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு வழிவகுத்தது. புராட்டஸ்டன்ட்கள் இப்போது ஒவ்வொரு வேத பகுதிக்கும் ஒரு ஒருங்கிணைந்த, ஒத்திசைவான அர்த்தத்தைப் பற்றிப் பேசினார்கள். வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையானது, அத்தியாயம் 1, பிரிவு 9 இல் பின்வருமாறு கூறுகிறது:

> எந்த வேதாகமத்தின் உண்மையான மற்றும் முழு உணர்வானது பன்மடங்கு அல்லாமல் ஒன்றாக இருக்கின்றது.

இந்த கண்ணோட்டத்தை நாம் அர்த்தத்தைப் பற்றிய ஒரு "ஒருமைப் பார்வை" என்று அழைக்கலாம்.

நிச்சயமாக, வேத பகுதிகள் பெரும்பாலும் சொல்லர்த்தமான அர்த்தத்தின் எளிய மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகமாகக் கூறுகின்றன என்பதை ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் உணர்ந்தனர். அசல் மனித எழுத்தாளர்களின் புரிதலுக்கு அப்பாற்பட்ட கிறிஸ்தவ சத்தியங்களுடன் அவை பல தாக்கங்களையும் தொடர்புகளையும் கொண்டிருக்கலாம். ஆனால் இந்த பரிமாணங்கள் அனைத்தும் இன்னும் ஒற்றை, உண்மையான மற்றும் முழு அர்த்தத்தின் ஒரு பகுதியாக உள்ளன, ஏனென்றால் அவை வேதாகமத்தின் சொல்லர்த்தமான அல்லது தெளிவான அர்த்தத்துடன் ஒருங்கிணைகின்றன.

> நாம் வேத வியாக்கியானம் செய்யும்போது, நம்முடைய வேத பகுதியில் என்ன நடக்கிறது என்பதன் பின் தான் நாம் பின்தொடர்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அப்போஸ்தலனாகிய பவுலாகவோ அல்லது ஒசியாவாகவோ இருந்தாலும் அந்த எழுத்தாளர் பொதுவாக என்ன நோக்கம் கொண்டிருந்தார்? என்பது தான் முக்கியம். ஒரு விரிவான வழியில் ஒரு எழுத்தாளரின் மனதில் நுழைவது மிகவும் கடினம், இதைத் தான் அவர் மனதில் சரியாக நினைத்தார் என்று சொல்வது கடினமாகும். எல்லா வேதவாக்கியங்களும் இரட்டை ஆசிரியர்களைக் கொண்டுள்ளன என்பதே நாம் கண்காணிக்க வேண்டிய ஒரு விஷயம் ஆகும். இது தேவனாலும் மனிதனாலும் எழுதப்பட்டது. எனவே, வேத



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எழுத்தாளர்கள் ஒரு காரியத்தைப் பற்றி மனதில் நினைத்து எழுதியிருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் இரண்டாவது, மூன்றாவது, நான்காம் அடுக்குகளை நோக்கமாகக் கொண்டிருக்கிற இடத்தில் அசல் எழுத்தாளருக்கு கூட முழுமையாகத் தெரியாத ஒன்றை எழுதியிருக்கலாம். இருந்தாலும் தேவன் அதைப் பயன்படுத்துகிறார். உண்மையில் முக்கியமானது என்னவென்றால், வேத பகுதியின் நேரடியான அர்த்தத்திற்கு மீண்டும் வருவதே முக்கியம் என்று நான் நினைக்கிறேன். அர்த்தத்தின் மற்ற எல்லா அடுத்தடுத்த அடுக்குகளையும் வெளிக்கொண்டு வரக்கூடிய நங்கூரம் அதுவாகும்.
>
> – நிக்கோலஸ் பெரின், Ph.D.

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை ஏவுதலின் மனிதப் பக்கத்தையும் வேதாகமத்தின் ஒன்றுபட்ட அர்த்தத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதோடு, ஆரம்பகால புராட்டஸ்டன்ட்களும் வேதாகமத்தின் தெளிவை நிலைநிறுத்துவதன் மூலம் வேதாகமத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்த முயன்றனர்.

## தெளிவு

வேதாகமத்தை தெளிவற்றதாகவும், அதிகாரப்பூர்வ சபை வியாக்கியானத்தின் தேவையையும் பார்ப்பதற்குப் பதிலாக, சீர்திருத்தவாதிகள் வேதாகமம் புரிந்துகொள்ளக்கூடியது என்று வாதிட்டனர். வேதாகம தெளிவு பற்றிய புராட்டஸ்டன்ட் கோட்பாட்டிற்கு பல காரணிகள் கணிசமாக பங்களித்தன.

முதலாவதாக, நகரக்கூடிய வகை அச்சு இயந்திரத்தின் பரவலான பயன்பாடு மேலும் மேலும் வேதாகமங்களைக் கிடைக்கச் செய்தது. வேதாகமங்கள் கிடைப்பதால் கிறிஸ்தவர்கள் தாங்களாகவே வேதத்தைப் படிப்பதை சாத்தியமாக்கியது. அவ்வாறு செய்யும்போது, வேதாகமம் தெளிவற்றது என்று கத்தோலிக்க சபை அறிவித்தபோது அது சரியானதா என்பதை அவர்களால் மதிப்பீடு செய்ய முடிந்தது.

இரண்டாவதாக, தைரியமான மிஷனரிகள் வேதாகமத்தை சாதாரண மக்களின் மொழிகளில் மொழிபெயர்க்கத் தொடங்கியிருந்தார்கள். இது மக்கள் தங்களுக்காக வேதாகமத்தின் தெளிவை ஆராய்வதையும் சாத்தியமாக்கியது.

மூன்றாவதாக, சொல்லர்த்தமான அர்த்தத்தில் சீர்திருத்தவாதிகளின் கவனம் இறையியலாளர்கள் தங்கள் வியாக்கியானங்களை ஆராய்ந்து சோதிக்கக்கூடிய ஒன்றை அடிப்படையாகக் கொள்ள உதவியது. வேதம் எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை அவர்களுக்குச் சொல்ல அவர்கள் இனிமேலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெறுமனே சபை அதிகாரிகளை நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லை. கத்தோலிக்க கண்ணோட்டத்திற்கு மாறாக, இந்த வழிகளில் வேதாகமத்தை ஆராய்வது, வேதாகமம் மிகவும் தெளிவாக இருந்தது என்பதை பரவலாக உணர வழிவகுத்தது.

இந்த வளர்ச்சிகள் புராட்டஸ்டன்ட்கள் வேதாகமத்தின் தெளிவை உறுதிப்படுத்தவும், கிறிஸ்தவத்திற்கான நடைமுறை அதிகாரமாக வேதாகமத்தை மீண்டும் நிலைநிறுத்தவும் வழியைத் திறந்தன. இந்தப் புதிய சூழலில், கத்தோலிக்க திருச்சபை தெளிவற்றதாகக் கருதிய பல முக்கியமான பகுதிகள் உண்மையில் புரிந்து கொள்ள ஒப்பீட்டளவில் எளிதானவை என்பது தெளிவாகத் தெரிந்தது. வேதத்தை அதிகமாக ஆராய்ந்தபோது, மேலும் மேலும் வேதாகம போதனைகள் குறிப்பிடத்தக்க வகையில் தெளிவாக இருப்பதை புராட்டஸ்டன்ட் வியாக்கியான அறிஞர்கள் கண்டுபிடித்தார்கள்.

> மார்ட்டின் லூதர் ஒரு கட்டத்தில் ஒரு பல்கலைக்கழகத்தில் ரோமர் புத்தகத்தைப் பற்றி கற்பித்துக் கொண்டிருந்தார், மேலும் அவரது சொற்பொழிவுகளின் போது அவர் கண்ட ஒரு வசனம் அவரது வாழ்க்கையை தனிப்பட்ட முறையில் மாற்றியது மட்டுமல்லாமல், நாம் அறிந்தபடி கிறிஸ்தவத்தின் முகத்தை உண்மையில் மாற்றியது. மார்ட்டின் லூதரை மிகவும் பாதித்த வசனம் ரோமர் 1:17, ”விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்” என்று அந்த வசனம் கூறுகிறது. அந்த நேரத்தில் சபையானது ஒருவர் வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய சடங்குகள் உள்ளன என்று போதித்துக் கொண்டிருந்தது, அப்படிச் செய்வதன் மூலம் கிருபை கிடைக்கும் என்றும் தேவனுடன் நீங்கள் ஒப்புரவாக முடியும் என்றும் போதித்தது. நாம் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவைப் பெறும்போது, உடனடியாக சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக நாம் நீதிமான்களாக காணப்படுவோம் என்று லூதர் புரிந்து கொண்டார் என்று இந்த வசனம் போதித்தது. நிச்சயமாகவே, நாம் சரியானவர்களாக ஆகவேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக கிறிஸ்துவில் விசுவாசத்தினாலே மட்டுமே நாம் சரியானவர்களாக ஆக முடியும் என்பதற்காக நாம் தொடர்ந்து நற்கிரியைகளைச் செய்து, தேவனைச் சேவிப்பதற்கான காரியங்களைச் செய்ய விரும்புகிறோம்.
>
> – Rev. ஜார்ஜ் சாம்பிளின்

இப்போது, சீர்திருத்தத்தின் ஆரம்ப தசாப்தங்களில், புராட்டஸ்டன்ட்கள் வேதாகமத்தின் தெளிவைப் பற்றி மிகவும் நம்பிக்கையுடன் இருந்தனர். அது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனைத்தும் மாறாக ஒரு எளிய விஷயமாக தோன்றியது: வேதாகமத்தைப் படித்து, அங்கே காணப்படும் தேவனுடைய தெளிவான வெளிப்பாட்டுக்கு இறையியலை இணங்குங்கள். ஆனால் புராட்டஸ்டன்ட் இயக்கம் வேதாகமத்தின் வழியாக தொடர்ந்து வேலை செய்தபோது, புராட்டஸ்டன்ட்களே மிகவும் யதார்த்தமானவர்களாக ஆனார்கள். அவர்கள் வேதத்தில் உள்ள தெளிவின் அளவுகளின் அடிப்படையில் பேசத் தொடங்கினர். வேதத்தின் சில பகுதிகள் மற்றவைகளை விடத் தெளிவாக இருந்தன என்பது தெளிவாகத் தெரிந்தது. எனவே, வேதாகமத்தின் ஒரு பகுதியைப் பற்றி லூதரன்கள் ஒரு விஷயத்தை நம்பியபோதும், அதுபோல கால்வினிஸ்டுகள் மற்றொரு பகுதியைப் பற்றி நம்பியபோதும், மற்றும் ஸ்விங்லியன்கள் வேறொரு பகுதியைப் பற்றி நம்பியபோதும், வேதத்தின் தெளிவு பற்றிய ஆரம்பகால, அதீத நம்பிக்கையான பார்வையானது மேலும் தகுதிவாய்ந்த கண்ணோட்டங்களுக்கு வழிவகுத்தது. இந்த மிகவும் முதிர்ச்சியான புராட்டஸ்டன்ட் பார்வை நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. அப்போஸ்தலனாகிய பேதுருகூட வேதவசனத்திலுள்ள சில காரியங்களைப் புரிந்துகொள்வது கடினம் என்று ஒப்புக்கொண்டார். 2 பேதுரு 3:16 இல் பேதுரு இந்த வார்த்தைகளை எழுதினார்:

> அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் (2 பேதுரு 3:16).

பேதுரு அதை எப்படி எடுத்துக் கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். பவுலின் *எல்லா* எழுத்துக்களும் புரிந்துகொள்வதற்கு எளிதானவை என்று அவர் சொல்லவில்லை. *அவை* எல்லாவற்றையும் புரிந்துகொள்வது கடினம் என்றும் அவர் சொல்லவில்லை. மாறாக, பவுலின் எழுத்துக்களில் உள்ள *சில* விஷயங்களைப் புரிந்துகொள்வது கடினம் என்று அவர் சொன்னார்.

எனவே, இடைக்கால சபைக்கு மாறாக, புராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகள் சபையின் அதிகாரத்திற்கு மேல் வேதாகமத்தின் அதிகாரத்தை உயர்த்தினர். புராட்டஸ்டன்ட்கள் வேதவசனத்தில் தேவனுடைய வெளிப்பாட்டிலிருந்து தாங்கள் துண்டிக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொண்டார்கள். அவர்கள் வேதாகமத்தின் தெளிவை உறுதிப்படுத்தினர், இதன் விளைவாக, வேதாகமமானது அனைத்து திருச்சபை அதிகாரத்தின் மீதும் முழுமையான அதிகாரமுடையதாக மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது.

> மனிதன் பாவமுள்ளவன் என்பதையும், இயல்பாகவே, நாம் தேவனுடைய விஷயங்களை எடுத்து அவற்றைச் சிதைக்கவும், அவற்றைக் குறைத்து மதிப்பிட்டு, அவற்றைத் தவறாகப் பிரயோகிப்போம் என்பதையும் சீர்திருத்தவாதிகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> புரிந்துகொண்டனர். ரோம கத்தோலிக்க திருச்சபையில் கோட்பாடுகளுக்கு முரணாக எது இருந்தது என்பதை அவர்கள் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். அதனால், தேவனுடைய வார்த்தையின் அதிகாரம் இறுதி அதிகாரமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். வேதாகமம் தான் மிக உயர்ந்த அதிகாரம் என்றும் ஒப்புக்கொள்கிறார்கள் என்று கூறினார்கள், அவர்கள் சபையில் அந்த அதிகாரத்தை வியாக்கியானம் செய்ய அதிகாரம் உண்டு என்றும் கத்தோலிக்க திருச்சபை அந்த காலத்திலிருந்து இன்று வரை கூறி வருகிறது, தர்க்கரீதியாக சபைக்கு தான் உண்மையில் இறுதி அதிகாரம் உள்ளது என்பது இதன் அர்த்தமாகும். மனிதன் பாவி என்பது தான் அதிலுள்ள ஆபத்தாகும். சீர்திருத்தவாதிகள் அப்பொழுது புரிந்துகொண்டதைப் போலவே, வேதவாக்கியத்தின் மீது வேதாகமத்தின் வியாக்கியானத்தைத் திணிக்க முற்படும் ஒரு திருச்சபைக் கட்டமைப்பை நாம் கொண்டிருக்கிறோம் என்பது இப்போதும் எந்த நேரத்திலும் உண்மைதான், மேலும் தேவனுடைய வார்த்தையை ஒரு பாவமுள்ள மனிதனின் அல்லது பாவப்பட்ட மனிதர்களின் தொகுப்பின் விளக்கத்திற்கு அடிபணியச் செய்கிறோம், அது எப்போதும் ஆபத்தானது. எனவே, சீர்திருத்தவாதிகளுக்கும் இன்று வாழும் நமக்கும், நாம் அணுகும் ஒவ்வொன்றும் தேவனுடைய வார்த்தையுடன் இணங்கி, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பது முக்கியமாகும்.
>
> — Dr. ஸ்டீவ் கர்டிஸ்

வேதாகமத்தின் அதிகாரத்தைப் பற்றிய ஆரம்பகால புராட்டஸ்டன்ட் கண்ணோட்டத்தை நாம் இப்போது பார்த்திருக்கிறோம், ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் திருச்சபையின் அதிகாரத்தை எப்படிப் பார்த்தார்கள் என்பதைப் பார்க்கும் நிலையில் இருக்கிறோம்.

## சபையின் அதிகாரம்

வேதாகமம் ஆவியானவரின் ஏவுதலால் அருளப்படுதல், வேதாகமத்தின் அர்த்தம் மற்றும் தெளிவு பற்றிய புராட்டஸ்டன்ட் கருத்துக்கள், ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் வேதாகமத்தை விசுவாசம் மற்றும் வாழ்க்கையின் ஒரே கேள்விக்கிடமற்ற விதியாக சபிக்கும் மேலாக இருக்கின்றது என்பதை மீண்டும் நிலைநிறுத்த அனுமதித்தன. மேலும், இன்று சுவிசேஷ சபையார்களாக, நாம் அதையே செய்ய வேண்டும். இருப்பினும், நாம் ஒரு முக்கியமான தகுதியைச்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சேர்க்க வேண்டும். ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் வேதாகமத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தியதைப் போலவே, அவர்கள் தங்கள் இறையியலைக் கட்டியெழுப்பியபோது அனைத்து திருச்சபை அதிகாரத்தையும் முற்றிலுமாக நிராகரிக்கவில்லை. மாறாக, புராட்டஸ்டன்ட்கள், வேதாகமத்தின் பிழையில்லாத போதனைகளுக்கு அடிபணிவதில் திருச்சபைக்கு இரண்டாம் நிலை, தவறிழைக்கக்கூடிய அதிகாரத்தை தேவன் வழங்கியதாக நம்பினார்கள்.

திருச்சபையின் அதிகாரத்தைப் பற்றிய புராட்டஸ்டன்ட் கண்ணோட்டத்தை இரண்டு திசைகளில் பார்ப்பதன் மூலம் ஆராய்வதற்கு இது உதவும். முதலாவதாக, ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் கடந்த கால திருச்சபை அதிகாரங்களை எவ்வாறு புரிந்து கொண்டனர்? இரண்டாவதாக, சமகால புராட்டஸ்டன்ட் அதிகாரங்களை அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்கள்? கடந்த காலத்திலிருந்து திருச்சபை அதிகாரம் குறித்த முதல் ஆரம்பகால புராட்டஸ்டன்ட் கண்ணோட்டங்களைக் கவனியுங்கள்.

## கடந்த கால அதிகாரங்கள்

நம்மில் பலருக்கு கற்பனை செய்வது கடினமாக இருந்தாலும், ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் சபை பிதாக்களின் போதனைகள் மற்றும் ஆரம்பகால சபைகளின் போதனைகளில் அதிக அதிகாரத்தை அங்கீகரித்தனர். சீர்திருத்தவாதிகள் திருச்சபையைப் பற்றிய வலுவான கோட்பாட்டைப் பேணி வந்தனர். தங்கள் காலத்தில் கிறிஸ்தவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டிய பல முக்கியமான சத்தியங்களுக்குள் ஆரம்பகால சபையை பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தியதாக அவர்கள் உறுதியாக நம்பினார்கள்.

நாம் ஒரு முந்தைய பாடத்தில் குறிப்பிட்டுள்ளபடி, சீர்திருத்தவாதிகள் வேதவாக்கியத்தின் அதிகாரத்தைப் பற்றி ”வேதம் மட்டுமே” என்கிற தலைப்பின் கீழ் பேசினார்கள். துரதிருஷ்டவசமாக, இன்று பல சுவிசேஷகர்கள் *வேதம் மட்டுமே* என்கிற கோட்பாட்டைப் பற்றி ஒரு தீவிரமான தவறான புரிதலைக் கொண்டுள்ளனர். நம் நாளில், பல சுவிசேஷகர்கள், *வேதம் மட்டுமே* என்கிற கோட்பாடு வேதாகமத்தைத் தவிர நமக்கு எந்த அதிகாரமும் இருக்கக்கூடாது என்பதைக் குறிக்கிறது என்று நம்புகிறார்கள். ஆனால் இது சீர்திருத்தத்தின் நிலைப்பாடு அல்ல, மேலும் இது *வேதம் மட்டுமே* என்கிற கோட்பாட்டின் உண்மையான உட்குறிப்பு அல்ல. சீர்திருத்தவாதிகள் வேதம் மட்டுமே என்கிற கோட்பாட்டை வலியுறுத்தினர், ஏனென்றால் வேதாகமம் மட்டுமே விசுவாசிகளுக்கு அதிகாரம் என்று அவர்கள் நம்பவில்லை. மாறாக, விசுவாசிகளுக்கு வேதாகமம் மட்டுமே *கேள்விக்கிடமற்ற* ஒரே அதிகாரம் என்று அவர்கள் அர்த்தப்படுத்தினார்கள். விசித்திரமாகத் தோன்றினாலும், புராட்டஸ்டன்ட்கள் *வேதம் மட்டுமே* என்கிற கோட்பாட்டை விடாப்பிடியாக ஆதரிக்கவில்லை, ஏனென்றால் அவர்கள் மற்ற எல்லா அதிகாரங்களையும் கைமீறிப் புறக்கணித்தனர். அவர்கள் மற்ற இறையியல் அதிகாரங்களை உயர்வாகக் கருதியதால் துல்லியமாக அதைப் பாதுகாத்தனர்.

> சீர்திருத்தவாதிகளில் நீங்கள் காணும் விஷயங்களில் ஒன்று, குறிப்பாக கால்வினில், அவர்கள் சபையின் அடித்தளமாக வேதாகமத்தின் அதிகாரத்தில் தங்கள் நம்பிக்கைக்கும் சபை பிதாக்களின் மீது  அவர்களுக்கு இருந்த பயபக்திக்கும் இடையே இருந்த அடிப்படை மோதலைக் காணவில்லை. பிதாக்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட முந்தைய, தூய்மையான பாரம்பரியத்திற்கு சபையை மீட்டெடுப்பதாக அவர்கள் முயன்றனர் … சபை பாரம்பரியத்திலிருந்து வேதாகமத்தைப் பற்றிய தங்கள் புரிதலை ஆதரிக்க அவர்கள் விரும்பினார்கள், எனவே அவர்கள் உண்மையில் அவற்றை அடிப்படையில் ஒன்றுக்கொன்று முரண்படும் கொள்கைகளாகக் காணவில்லை. ஆனால் அவர்கள் சபை பாரம்பரியத்தின் அதிகாரத்தையும் ஆரம்பகால திருச்சபை பிதாக்களையும் வேத அதிகாரத்தின் அதே மட்டத்தில் வைக்கவில்லை.
>
> – Dr. ஜெஃப் டிரைடென்

வசதிக்காக, *வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையானது,* அத்தியாயம் 1, பிரிவு 10 இல் இந்த விஷயங்களின் சுருக்கத்தைக் குறிப்பிடுவது உதவியாக இருக்கும்:

> மதத்தின் எல்லா சர்ச்சைகளையும் தீர்மானிக்கிறவரும், ஆலோசனை கூட்டங்களின் எல்லா ஆணைகளையும், பண்டைய எழுத்தாளர்களின் அபிப்பிராயங்களையும், மனிதர்களின் கோட்பாடுகளையும், தனிப்பட்ட ஆவிகளையும் ஆராய்கிறவரும், நம்மை நியாயம் தீர்க்கிறவருமாகிய, வேதவசனத்தில் பேசுகிறவருமாகிய பரிசுத்த ஆவியைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது.

வேதாகமத்தில் பேசுகிற பரிசுத்த ஆவியானவர் ”மதத்தின் சகல சர்ச்சைகளையும் தீர்மானிக்கிற உன்னதமான நியாயாதிபதி” என்பதை இந்த வேத பகுதி வலுவாக உறுதிப்படுத்துகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சபையின் எல்லா நியாயத்தீர்ப்புகளும் வேதாகமத்தின் தராதரத்தின்படி செய்யப்பட வேண்டும். ஆனால் இங்கே பயன்படுத்தப்படுகிற மொழியை கவனியுங்கள். வேதாகமத்தில் பேசும் பரிசுத்த ஆவியானவர் ”உன்னதமான நியாயாதிபதி” ஆவார். உச்ச நீதிபதி ஒருவர் இருக்கிறார் என்றால், மற்ற நீதிபதிகள் உச்ச நீதிபதிகள் அல்ல என்பதும் தெளிவாகிறது. உண்மையில், அறிக்கையானது இந்த வேத பகுதியில் வேறு பல அதிகாரங்களைக் குறிப்பிடுகிறது. அது ஆலோசனை சங்கங்களையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பண்டைய எழுத்தாளர்களையும், அல்லது சபைப் பிதாக்களையும் கடந்த கால மற்றும் தற்போதைய சபையில் மனிதர்கள் போதித்த போதனைகளையும் மற்றும் தனிப்பட்ட ஆவிகளையும், அதாவது, ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிய உள்நோக்கிய உணர்வு அல்லது நம்பிக்கையையும் இது முக்கியமாக குறிப்பிடுகிறது. *வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையானது* இந்த அதிகாரங்களை அங்கீகரித்தது, ஆனால் அவைகளுக்கு இரண்டாம் நிலை அந்தஸ்தை வழங்கியது, அதாவது, வேதாகமத்தின் முழுமையான அதிகாரத்தின் கீழ் அவைகள் இருக்க வேண்டும்.

சீர்திருத்தவாதிகள் திருச்சபை அதிகாரத்தை நிராகரிப்பதாக கத்தோலிக்க இறையியலாளர்கள் அடிக்கடி குற்றம் சாட்டினர். ஆனால் சீர்திருத்தவாதிகள் வேதம் மட்டுமே என்ற தங்கள் கோட்பாட்டைப் பேணிவந்ததால் கடந்த காலத்தை நிராகரிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் பெரும்பாலும் ஆரம்பகால திருச்சபை பிதாக்களைப் பற்றிய குறிப்புகளுடன் தங்கள் கருத்துக்களை ஆதரித்தனர். உண்மையில், ஜான் கால்வினின் இன்ஸ்டிட்யூட் ஆப் கிறிஸ்டியன் ரிலிஜியன் என்கிற புத்தகத்தின் ஒவ்வொரு மறு பதிப்பிலும், கால்வின் ஆரம்பகால சபை பிதாக்களைப் பற்றி அதிகம் எழுதினார். கூடுதலாக, கால்வினின் இன்ஸ்டிட்யூட்ஸில் உள்ள ஒரு பகுதி சபை கவுன்சில்களின் அதிகாரம் குறித்த அவரது கண்ணோட்டத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஜான் கால்வினின் புத்தகமான ‘இன்ஸ்டிட்யூட் ஆப் கிறிஸ்டியன் ரிலிஜியன்’ என்ற புத்தகத்தில், புத்தகம் 4, அத்தியாயம் 9 இல் கூறியதைக் கவனியுங்கள்.

> எல்லா ஆலோசனை சங்கங்களும் கண்டிக்கப்பட வேண்டும் என்றோ அல்லது எல்லாருடைய செயல்களும் ரத்து செய்யப்பட வேண்டும் என்றோ, (பழமொழி கூறுவது போல) நான் இங்கு வாதிடவில்லை. ஆனால், இதனால் ஆலோசனை சங்கங்கள் முடிவு செய்வதை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு என்று நீங்கள் எல்லாவற்றையும் இழிவுபடுத்துகிறீர்கள் என்று கூறுவீர்கள். இல்லவே இல்லை! ஆனால், எந்த ஒரு சபையின் கட்டளையும் முன்வைக்கப்படும் போதெல்லாம், அது எந்த நேரத்தில் நடைபெற்றது, எந்தப் பிரச்சனையைப் பற்றி பேசியது, என்ன நோக்கத்துடன் இது கூடியது, எந்த வகையான மனிதர்கள் அதில் இருந்தார்கள் என்பதை முதலில் சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; பின்னர் வேதவசனத்தின் தராதரத்தின்படி அது என்ன கையாண்டது என்பதை ஆராய வேண்டும். சபையின் வரையறை அதன் பலத்தைக் கொண்டிருக்கக் கூடிய வகையிலும், ஒரு தற்காலிகத் தீர்ப்பைப் போல இருக்கக்கூடிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வகையிலும், நான் குறிப்பிட்டுள்ள ஆய்வுக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவும் நாம் இதைச் செய்ய வேண்டும்.

கால்வினின் வார்த்தைகளில் பல முக்கியமான கருத்துக்கள் இங்கே தனித்து நிற்கின்றன. முதலாவதாக, திருச்சபையின் ஆலோசனை சங்கங்கள் வரலாற்று ரீதியாக புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். அவைகள் காலத்திற்கு அப்பாற்பட்டவைகள் அல்ல, தேவனிடமிருந்து நேரடியாக வெளிப்படுத்தப்பட்டவைகளும் அல்ல. மறுமலர்ச்சியின் வியாக்கியன முறைகள், அதாவது சொல்லர்த்தமான-வரலாற்று அர்த்தத்தில் கவனம் செலுத்துதல் சபை ஆலோசனை சங்கங்களில் பயன்படுத்தப்பட வேண்டும். விசுவாசிகள் ”எந்த நேரத்தில் [ஒரு ஆலோசனைக் கூட்டம்] நடைபெற்றது, எந்தப் பிரச்சனையைப் பற்றி பேசியது, என்ன நோக்கத்துடன் நிகழ்ந்தது, என்ன வகையான மனிதர்கள் அதில் இருந்தார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும்.”

இரண்டாவதாக, சபையின் போதனைகள் இறுதியாக வேதாகமத்தின் வெளிச்சத்தில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று *வேதம் மட்டுமே* என்கிற கோட்பாடு கால்வினை வலியுறுத்த வழிவகுத்தது. அவர் இங்கே குறிப்பிட்டுள்ளபடி, ”வேதாகமத்தின் தராதரம்” பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் மூன்றாவதாக, மிக முக்கியமாக இங்கு நமது நோக்கங்களுக்காக, கடந்த காலக் கோட்பாடுகள் ”ஒரு தற்காலிகத் தீர்ப்பைப் போல” ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கால்வின் கூறினார். அதாவது, திருச்சபையின் நீண்டகால, பண்டைய கண்டுபிடிப்புகள் நமது தற்காலிக அல்லது பூர்வாங்க நியாயத்தீர்ப்புகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். கவனமாக, வேத விளக்கவுரையானது அவைகளை தவறு என்று நிரூபிக்கும் வரை நாம் அவர்களின் போதனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கால்வினின் உத்தியானது அவரது காலத்தில் மிகவும் தீவிரமான புராட்டஸ்டன்ட்களைத் தவிர அனைவரையும் வழிநடத்திய ஞானத்தை பிரதிபலித்தது. புராட்டஸ்டன்ட்களில் பெரும்பாலோர் ஆரம்பகால திருச்சபை பிதாக்கள் எழுதியவைக்கும் திருச்சபையின் அறிக்கைகளுக்கும் மேலான அதிகாரம் இருப்பதைப் புரிந்துகொண்டனர். வேதாகமத்தின் மேலாதிக்கத்திற்கான ஒரு உறுதிப்பாட்டினால் தூண்டப்பட்டு, அவர்கள் இந்த கடந்தகால திருச்சபை அதிகாரங்களை தற்காலிக ஏற்புடன் அணுகினர்.

கடந்த கால திருச்சபை அதிகாரங்களுடன் திருச்சபையின் அதிகாரத்தை ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் எப்படி ஒப்பிட்டுப் பார்த்தார்கள் என்பதைப் பார்த்த பிறகு, சீர்திருத்தவாதிகள் தங்கள் சமகால புராட்டஸ்டன்ட் அதிகாரங்களை எவ்வாறு புரிந்து கொண்டார்கள் என்பதை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். தற்போதைய இறையியல் விஷயங்களுக்கு விடையளிக்க

முயன்றபோது தங்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர்கள் எத்தகைய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டார்கள்?

## தற்கால அதிகாரங்கள்

நீங்கள் நினைவுகூர்வது போல, இடைக்கால கத்தோலிக்க திருச்சபை வாழும் இறையியல் அதிகாரங்களின் விரிவான அமைப்பை உருவாக்கியது, இது தவறு செய்யாதவராக இருக்கிற போப்பில் உச்சக்கட்டத்தை அடைந்தது. புராட்டஸ்டன்ட் சீர்திருத்தம் பெரும்பாலும் இந்த திருச்சபை அதிகாரத்தை நிராகரிப்பதற்கு ஒப்பானது. வேதத்தின் அதிகாரம் மட்டுமே கேள்விக்கிடமற்றதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். போப், சபை ஆலோசனை சங்கங்கள், மற்றும் பிற திருச்சபை அதிகாரங்கள் தவறு மற்றும் பிழைக்கு உட்பட்டவர்கள்.

ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் சபையில் முறையாக நியமிக்கப்பட்ட போதகர்களின் அதிகாரத்தை மிகவும் மதித்தனர் என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். தனிப்பட்ட அறிஞர்கள், அல்லது ”திருச்சபையின் கல்வி அறிஞர்கள்” என்று அழைக்கப்படுகிறவர்கள், புராட்டஸ்டன்ட்கள் சீர்திருத்த இறையியலை மேலும் வளர்த்ததால், உயர் மதிப்புக்கு தகுதியானவர்களாக கருதப்பட்டனர். உண்மையில், ஏறக்குறைய ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த புராட்டஸ்டன்ட்களும் சபையில் இரண்டாம் நிலை அதிகாரங்களாக ஒப்புக்கொள்ளப்பட்ட அறிக்கைகளையும், மத நம்பிக்கைகளையும் உருவாக்கினர். இந்த ஆரம்பகால புராட்டஸ்டன்ட்டுகள் ஒரு காரணத்திற்காக முறையாக நியமிக்கப்பட்ட சமகால இறையியலாளர்கள் மீது இவ்வளவு உயர்ந்த மதிப்பைக் கொண்டிருந்தனர். சபையில் தேவன் வைத்த அதிகாரங்களை கனம்பண்ணும்படி கிறிஸ்துவின் சீஷர்களுக்கு வேதாகமம் கற்பித்ததாக அவர்கள் நம்பினார்கள். வேதாகமத்தின் பல பகுதிகள் இந்த விஷயத்தைப் பற்றி பேசுகின்றன. உதாரணமாக, தீத்து 2:1,15 இல் பவுல் தீத்துவுக்கு இந்த வார்த்தைகளைக் கற்பித்தார்:

> நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக (தீத்து 2:1,15).

> சீர்திருத்தத்தின் மையமானது அதிகாரத்தைப் பற்றிய பிரச்சனையாக இருந்தது, ஏனென்றால் மற்ற அனைத்தும், நாம் நம்பும் எல்லா விஷயங்களும், நமது அதிகாரம் என்ன என்பதைப் பற்றிய நமது தேர்விலிருந்து உருவாகின்றன... முதல் நூற்றாண்டின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளாகிய சபையின் அஸ்திபாரத்தின் மீதும் பிரதான மூலைக்கல்லாகிய கிறிஸ்துவின் மீதும் நாம் இளைப்பாறுகிறோம் என்று புதிய ஏற்பாடு நமக்குச்

> சொல்கிறது, ஆனால் பின்னர் சுவிசேஷகர்கள், போதகர்கள் மற்றும் போதாகர்களாகிய சபை அதிகாரங்கள் நம்மிடம் உண்டு. எனவே, சபை அதிகாரங்கள் நமக்கு மிகவும் முக்கியமானவை, ஏனென்றால் மறைமுகமாக அவர்கள் ஞானத்தையும் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சத்தியத்திற்கு தங்களைக் கீழ்ப்படிய உதவும் அனுபவங்களையும் அவர்கள் பெறப் போகிறார்கள். ஆனால் அந்த அதிகாரங்கள் எப்பொழுதும் கர்த்தராகிய இயேசுவுக்கும் வேதத்தின் கேள்விக்கிடமற்ற அதிகாரத்தை அவர் உறுதிப்படுத்துவதற்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

வேதாகமம் மற்றும் திருச்சபை அதிகாரத்திற்கு இடையிலான இந்த சமநிலையை சீர்திருத்த வட்டங்களில் அடிக்கடி திரும்பத் திரும்பச் சொல்லப்படும் ஒரு பழைய கோஷத்தில் சுருக்கமாகக் கூறலாம்: "சீர்திருத்த சபை எப்போதும் சீர்திருத்தப்படுகிறது," அல்லது அது பெரும்பாலும் லத்தீன் சொற்றொடரில் *செம்பர் ரிபர்மாண்டா* என்று அழைக்கப்படுகிறது. சீர்திருத்த சபையானது, திருச்சபை அதிகாரங்கள் முக்கியமானவையாக இருந்தாலும், அவை எப்பொழுதும் வேதாகமத்தின் பரிசீலனைக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பதை முழுமையாக உணர்ந்திருந்தன என்பதை இந்த கோஷங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இப்போது நாம் இடைக்கால ரோம கத்தோலிக்கம் மற்றும் ஆரம்ப புராட்டஸ்டன்ட் காலங்களில் இறையியலில் அதிகாரம் பற்றிய கருத்துக்களைப் பார்த்துள்ளோம், இந்த பாடத்தின் மூன்றாவது தலைப்பான இன்றைய புராட்டஸ்டன்ட் அமைப்பை கருத்தில் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

# தற்கால புராட்டஸ்டன்ட் அமைப்பு

"அதிகாரம்" என்பது இன்று உலகின் பல பகுதிகளில் சுவிசேஷ புராட்டஸ்டன்ட்டுகளிடையே வலுவான எதிர்மறையான எதிர்வினைகளைத் தூண்டும் ஒரு கருத்தாகும். அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை எவ்வாறு அடிக்கடி துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதை நம்மில் பலர் பார்க்கிறோம், நாம் இயல்பாகவே அவர்களை எதிர்க்கிறோம். நாம் பார்த்தபடி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கிறிஸ்தவர்கள் இறையியலில் கூட இந்த விஷயங்களுடன் போராடியுள்ளனர். எனவே, நமது முன்னோர்கள்

இறையியல் அதிகாரத்தைக் கையாண்ட விதங்களிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள வேண்டும்? நாம் இன்று இறையியலைக் கட்டியெழுப்புகையில், இன்றைய சுவிசேஷகர்களுக்கான அதிகாரத்தின் மதிப்புகளும் ஆபத்துக்களும் யாவை?

வேதவாக்கியத்தின் அதிகாரத்தை நோக்கி நாம் கொண்டிருக்க வேண்டிய கண்ணோட்டங்களின் வகைகளை முதலில் நிவர்த்தி செய்வதன் மூலம் இன்றைய புராட்டஸ்டன்ட் பற்றிய இந்தக் கேள்விகளுக்கு முதலில் பதிலளிப்போம். இரண்டாவதாக, சபையின் அதிகாரத்தை நோக்கி நாம் கொண்டிருக்க வேண்டிய சில முக்கியமான முன்னோக்குகளை நாம் பரிந்துரைப்போம். வேதாகமத்தின் அதிகாரத்தைக் குறித்து முதலில் பார்ப்போம்.

## வேதாகமத்தின் அதிகாரம்

> கிறிஸ்தவர்கள் மீதான வேதத்தின் அதிகாரம் அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு முழுமையான அதிகாரமாக இருக்கிறது. அதற்கு மாற்றானதை செய்தால் நம்மை தேவனாக அமைத்துக் கொள்வது போலாகும். வேதத்தைப் பார்த்து, ”சரி, நான் அந்தப் பகுதியைப் பின்தொடரப் போவதில்லை, ஆனால் இந்தப் பகுதியைப் பின்பற்றப் போகிறேன்,” அல்லது, ”நான் இந்த சிறிய வசனத்திற்குக் கீழ்ப்படியப் போகிறேன், அந்த சிறிய வசனத்திற்குக் கீழ்ப்படியப் போவதில்லை,” என்று சொல்வது, ஒரு அர்த்தத்தில், வேதவாக்கியத்திற்கு மேலாக நம்மை அமைத்து, எது உண்மை, எது உண்மையல்ல, எதைப் பின்பற்றுகிறோம், எதைப் பின்பற்ற மாட்டோம் என்பதை நாமே தீர்மானிப்பது போலாகும். நாம் அதைச் செய்யும்போது , நாமே சிறிய தெய்வங்களாக மாறிவிடுகிறோம். பிரபஞ்சத்தின் தேவனாக நாம் நம்மை அமைத்துக் கொள்வதைப் போலாகும். அது விக்கிரகாராதனையாகும். எனவே, வேதாகமத்தை மறுதலித்து, அதன் அதிகாரத்தின் அடிப்படையில் வாழாமல் இருப்பது, தேவனைப் பின்னுக்குத் தள்ளி, நம்மை அந்த அதிகாரமாக்கிக்கொள்ள முயற்சிப்பதாகும். எனவே, வேதாகமம் கிறிஸ்தவ வாழ்க்கையின் கிட்டத்தட்ட ஒவ்வொரு பகுதியிலும் ஆதிக்கம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும், அப்படிச் செய்தால் அவர்கள் உண்மையில் இறுதி அதிகாரத்தை தேவனிடம் கொடுப்பார்கள்.
>
> – Dr. மைக்கேல் ஜே. க்ருகர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேதவாக்கியம் தேவனால் அருளப்படுதல், வேத வாக்கியங்களின் அர்த்தம் மற்றும் வேதாகமத்தின் தெளிவு ஆகிய மூன்று விஷயங்களில் இந்த பாடம் முழுவதிலும் கவனம் செலுத்துவதன் மூலம் வேதாகமத்தினுடைய அதிகாரத்தின் தற்கால கண்ணோட்டங்களை ஆராய்வோம். நமது நாளில், இந்த விஷயங்களைக் குறித்த பல்வேறு கண்ணோட்டங்கள் சீர்திருத்த மரபைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றன. வேதாகமம் ஆவியானவரால் அருளப்படுதல் குறித்த நவீன கண்ணோட்டங்களிலிருந்து தொடங்கி, இந்தக் கண்ணோட்டங்களைப் பார்த்து, அவற்றின் மதிப்பைப் பார்ப்போம்.

## வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் குறித்த குறைந்தபட்சம் மூன்று கருத்துக்கள் இன்றைய புராட்டஸ்டன்ட்களிடையே பிரபலமாக உள்ளன. வரம்பின் ஒரு முனையில் நாம் அடிக்கடி நேச உத்வேகம் என்று அழைக்கும் ஒரு பார்வை உள்ளது. வரம்பின் மறுமுனையில் எழுத்தாளர்களை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லி எழுத வைத்த முறை என்று அழைக்கப்படும் இதேபோன்ற தீவிர பார்வை உள்ளது. இந்த தீவிர பார்வைகளுக்கு இடையில் இயற்கையான ஏவுதல் என்று அழைக்கப்படும் ஒரு கண்ணோட்டம் உள்ளது. இந்த மூன்று கருத்துக்களையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

நேச உத்வேகம் பரவலாக தாராளவாத சார்பு புராட்டஸ்டன்ட்களால் ஆதரிக்கப்படுகிறது. இந்தக் கண்ணோட்டத்தில், ஷேக்ஸ்பியர், ரெம்ப்ராண்ட் அல்லது பாக் போன்ற சிறந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் இசையமைப்பாளர்கள் ஈர்க்கப்பட்டது போல வேதாகமமும் ஒரு ”நேச” அர்த்தத்தில் ஈர்க்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. அதாவது, தேவன் வேத எழுத்தாளர்களை ஊக்குவித்தார், ஆனால் அவர் அவர்களின் எழுத்துக்களை மேற்பார்வையிடவில்லை. இந்தக் கண்ணோட்டத்ததின் படி, வேதவாக்கியங்கள் மனிதர்களின் அபிப்பிராயங்கள் மட்டுமே. எனவே, வேத வாக்கியங்கள் தவறுள்ளதும் சபையின் மீது முழுமையான அதிகாரம் இல்லாததாகவும் இருக்கின்றன. வேதம் தேவ ஆவியால் அருளப்படுதல் பற்றிய இந்தக் கண்ணோட்டம் சீர்திருத்தத்தின் உணர்வைக் கடைப்பிடிப்பவர்களால் நிராகரிக்கப்பட வேண்டும் என்பது நிச்சயமாகும். இந்தப் பார்வை வேதாகமத்தின் *நம்பகத்தன்மையையும் இறுதி அதிகாரத்தையும் மறுப்பதன் மூலம் வேதம் மட்டுமே என்கிற கோட்பாட்டிற்கான மைய புராட்டஸ்டன்ட் அர்ப்பணிப்பைக் கைவிடுகிறது.*

வரம்பின் மறுமுனையில் எழுத்தாளர்களை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லி எழுத வைத்த முறை உள்ளது, அல்லது சில நேரங்களில் அது ”டிக்டேஷன் மூலம் தேவ வசனம் அருளப்படுதல்” என்று அழைக்கப்படுகிறது. ஒரு அளவிற்கு அல்லது மற்றொரு அளவிற்கு, வேதாகம எழுத்தாளர்கள் வேதாகமத்தை எழுதியதால் ஒப்பீட்டளவில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செயலற்றவர்களாக இருந்தனர் என்று இந்த கண்ணோட்டமானது வலியுறுத்துகிறது. இந்தக் கண்ணோட்டத்தின் படி, மனித எழுத்தாளர்கள் அவருடைய இணக்கமான காரியதரிசிகளாக மட்டுமே செயல்பட்டார்கள், தேவன் தான் வேதாகமத்தை எழுதினார். மொத்தத்தில், இந்தக் கண்ணோட்டமானது மனித எழுத்தாளரின் வரலாற்றுப் பின்னணி மற்றும் அசல் அர்த்தத்தின் முக்கியத்துவத்தை மறுப்பதன் மூலம் வேதம் மட்டுமே என்கிற கோட்பாட்டின் சீர்திருத்தக் கோட்பாட்டிலிருந்து விலகிச் செல்கிறது. சீர்திருத்தவாதிகள் கவனமாகக் கவனிக்கையில், வேதவாக்கியத்தின் சொல்லர்த்தமான உணர்வின் மதிப்பை மறுப்பது வேதாகமத்தின் நடைமுறை அதிகாரத்தைத் தடுக்கிறது. வேதாகமத்தின் அர்த்தத்தை இனிமேலும் மதிப்பிடவும் பின்பற்றவும் முடியாது, மேலும் வேதாகமத்திற்குள் நமது சொந்த கருத்துக்களை திணிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதன் விளைவாக, வேதாகமமே இறையியலில் நமது உயர்ந்த அதிகாரமாக இனிமேலும் சேவை செய்வதில்லை.

இன்றைய புராட்டஸ்டன்ட் இறையியலானது, வேதம் ஆவியால் அருளப்படுவதின் முழுமையான இயல்பை மீண்டும் உறுதிப்படுத்துவதன் மூலம் நேச முறை மற்றும் எழுத்தாளர்களை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லி எழுத வைத்த முறை ஆகிய இரண்டின் உச்சநிலைகளையும் தவிர்க்க வேண்டும். இயற்கையான அகத்தூண்டுதலில், தேவன் வேதாகம எழுத்தாளர்களை எழுதத் தூண்டினார், மேலும் அவர்கள் பிழையற்றதாகவும் அதிகாரப்பூர்வமாகவும் எழுதினார்கள் என்று அவர்களின் எழுத்துக்களை மேற்பார்வையிட்டார். ஆனால் அவர் அவர்களின் தனிப்பட்ட எண்ணங்கள், உந்துதல்கள், உணர்வுகள் அல்லது அவர்களின் இறையியல் ஆகியவற்றை மீறவில்லை. மாறாக, வேதம் தேவ ஆவியால் அருளப்பட்டதில் மனித மற்றும் தெய்வீக பரிமாணங்கள் முரண்படவில்லை. மாறாக, முழு வேதாகமமும் தேவனுடைய காலத்திற்கு அப்பாற்பட்ட சத்தியங்களை மனிதனுக்கு புரியும் வழியிலும், கலாச்சார ரீதியாகவும் முன்வைக்கிறது. வேதாகமத்தின் போதனைகள் அனைத்தும் எல்லாக் காலங்களிலும் நெறிமுறையானவை, ஆனால் அதன் போதனைகள் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் சூழலுடன் பிணைக்கப்பட்டுள்ளன. இயற்கையான அகத்தூண்டுதல் பற்றிய புராட்டஸ்டன்ட் பார்வை மனித மற்றும் தெய்வீக, வரலாற்று மற்றும் முழு வேதாகமத்தின் தெய்வீக குணங்களையும் வலியுறுத்துகிறது. பரிசுத்த ஆவியானவரால் வேதம் அருளப்படுதல் பற்றிய இந்தக் கண்ணோட்டத்தில், வேதம் மட்டுமே என்ற கோட்பாடு பராமரிக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரால் வேதம் அருளப்படுதலைப் பற்றி புராட்டஸ்டன்ட்டுகள் சிந்திக்கும் மூன்று முக்கிய வழிகளில், இயற்கையான அகத்தூண்டுதலின் கோட்பாடு புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்திற்கு வழிவகுத்த மற்றும் வழிநடத்திய கொள்கைகளுடன் மிகவும் முழுமையாக ஒத்துப்போகிறது என்பதில் சந்தேகமில்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வேதாகமத்தின் பல்வேறு வகையான எழுத்தாளர்களை பரிசுத்த ஆவியானவர், அவர்களின் அனுபவங்கள், அவர்களின் வாழ்க்கை ஆகியவற்றை பயன்படுத்தி தேவன் யார் என்றும் அது நம் வாழ்க்கையில் என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது என்பதையும்  பற்றிய ஒரு முழு படத்தைக் கொண்டுவருவதற்காக எவ்வாறு செயல்பட்டார் என்பதே வேதத்தைப் பற்றி நான் நேசிக்கும் விஷயங்களில் ஒன்றாகும். எனவே, தேவன் வெவ்வேறு எழுத்தாளர்களை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை நாம் பார்க்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களின் சொந்த ஆளுமையின் மூலமும், தங்கள் சொந்த அனுபவங்களின் மூலமும் என்ன செய்கிறார் என்பதையும், என்ன எழுத வேண்டும் என்பதையும், என்ன சொல்ல வேண்டும் என்பதையும் அவர்களுக்கு உணர்வைக் கொடுக்க அவர்களுடன் உள்ளார்ந்த முறையில் வேலை செய்வதாகத் தெரிகிறது. எனவே, அது ஜீவனுடனும் ஐசுவாரியத்துடனும் முழுவதுமாகவும் இருக்கிறது. இது மிகவும் இயந்திரத்தனமாக இருப்பதற்கு எதிராக, பல்வேறு வழிகளில் அதனுடன் இணைக்க நிறைய மக்களை அனுமதிக்கிறது. நாம் கடந்து செல்லும் அனுபவங்களை தேவன் பாராட்டுகிறார் என்று நான் நினைக்கிறேன், பரிசுத்த ஆவியானவர் பின்னர் அந்த எழுத்தாளர்களை என்ன எழுத வேண்டும் என்பதற்கான உத்வேகத்தை கொடுக்கும் ஒரு வழியில் உட்செலுத்துகிறார், பின்னர் அவர்கள் தங்கள் ஆளுமைகளில் தானாக செயல்படுகிறார்கள்.
>
> – Dr. டான் லாகிக்

இயற்கையான அகத்தூண்டுதலை வலியுறுத்துவதோடு, நவீன புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் வேதாகமத்தின் அர்த்தத்தை சரியாக மதிப்பிடுவதன் மூலம் வேதாகமத்தின் அதிகாரத்தையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

## அர்த்தம்

மறுபடியும், வேதாகமத்தின் அர்த்தத்தைப் பற்றிய புராட்டஸ்டன்ட் சிந்தனையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலைப்பாடுகளின் ஒரு வரம்பு நம்மிடம் இருக்கிறது. ஆனால் எல்லா தேர்ந்தெடுப்புகளும் சீர்திருத்தத்தின் இலட்சியங்களை மேலும் அதிகரிக்கவில்லை. வரம்பின் ஒரு முனையில் நாம் *"தற்கால பல அர்த்தமுள்ள பதம்"* என்று அழைக்கும் ஒரு பார்வை உள்ளது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மறுமுனையில் நாம் *"ஒரே அர்த்தமுள்ள பதம்"* என்று அழைக்கும் ஒரு பார்வை உள்ளது. மற்றும் நடுவில் நாம் "சிக்கலான அர்த்தமுள்ள பதம்" என்று அழைக்கும் ஒரு பார்வை உள்ளது. தற்கால பல அர்த்தமுள்ள பதத்தைப் பற்றி முதலில் பார்ப்போம்.

சமீபத்திய தசாப்தங்களில், சில புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் வேதபகுதிகளின் பலபடித்தன்மையைப் பற்றிப் பேசியுள்ளனர், ஏனென்றால் வேதவாக்கியங்கள் வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளன என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் வேதத்தின் தெய்வீகத் தோற்றத்தின் காரணமாக செவ்வியல் பலபடித் தன்மை பல அர்த்தங்களை உறுதிப்படுத்தினாலும், தற்கால பலபடித் தன்மை பொதுவாக *மனித மொழியின் தெளிவின்மைகளை* அடிப்படையாகக் கொண்டது.

இதன் விளைவாக, சமகால பலபடித்தன்மையானது வேத பகுதிகள் வியாக்கியான அறிஞர்கள் அர்த்தத்தை நிரப்புவதற்கான வெற்று பாத்திரங்கள் என்று போதிக்கிறது. இப்போது, இந்தக் கண்ணோட்டத்தைப் பின்பற்றுகிறவர்கள், ஒரு பாத்திரம் ஒரு குறிப்பிட்ட வடிவத்தைக் கொண்டிருப்பதைப் போலவே, வேத பகுதிகளின் இலக்கணமும் அர்த்தத்தின் சில அடிப்படை அளவுருக்களை நிறுவுகிறது என்பதை அங்கீகரிக்கிறார்கள். ஆனால், இந்த அளவுருக்களுக்குள், குறிப்பிட்ட அர்த்தமானது வேத வியாக்கியான அறிஞர்களால் வழங்கப்படுகிறது. இந்த அடிப்படையில், *நேரடி உணர்வு* மீதான சீர்திருத்தத்தின் அழுத்தத்தை நாம் நிராகரிக்க வேண்டும் என்று வாதிடப்படுகிறது. அதற்குப் பதிலாக, வேத பகுதிகளுக்கான நமது வியாக்கியானத்தை கொடுக்க வேண்டும், அந்த வேத பகுதியின் மூல அர்த்தத்தைப் பற்றி சிறிதளவேணும் கவலைப்படக் கூடாது.

துரதிருஷ்டவசமாக, பலபடித்தான இந்த தற்கால கருத்து வேதாகமத்தின் அதிகாரத்தை செல்லுபடியற்றதாக்குகிறது. இது வியாக்கியான அறிஞர்களுக்கு தங்கள் சொந்த கருத்துக்களை வேதாகமத்தில் ஊற்றுவதற்கான உரிமையை அளிக்கிறது. இந்த காரணத்திற்காக, நாம் அதை நிராகரிக்க வேண்டும்.

வரம்பின் மறுமுனையில் *"எளிமையான ஒரே அர்த்தம்"* என்ற கருத்து உள்ளது. வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரே ஒரு அர்த்தம் மட்டுமே உண்டு என்ற கருத்தை இந்தக் கண்ணோட்டம் சரியாக ஊக்குவிக்கிறது. ஆனால் ஒற்றை அர்த்தம் சிக்கலானதாக இருக்கலாம் என்பதை அது தவறாக மறுக்கிறது. உதாரணமாக யோவான் 3:16 ஐ எடுத்துக் கொள்வோம்:

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

எளிமையான ஒரே அர்த்தத்தை மனதில் கொண்ட ஒரு கிறிஸ்தவர் இது போன்ற ஒன்றைச் சொல்லலாம்: "இந்த வசனம் மிகவும் எளிமையானது.

யோவான் 3:16 நாம் கிறிஸ்துவில் விசுவாசமாயிருக்க வேண்டும் என்று நமக்குச் சொல்கிறது.”

யோவான் 3:16 கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் மிகவும் எளிமையான வழிகளில் சுருக்கமாகக் கூறும் நன்கு அறியப்பட்ட வசனமாகும். ஆனால் உண்மையில், இந்த வசனம் அனைத்து வகையான தொலைதூர தலைப்புகளையும் தொடுகிறது. அது தேவனுடைய அன்பைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறது. இது கிறிஸ்துவின் அவதாரம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நமக்கு நினைவூட்டுகிறது. இது உலகம், நித்திய தண்டனை மற்றும் நித்திய ஜீவனைப் பற்றி பேசுகிறது. இந்த தலைப்புகள் ஒவ்வொன்றும் சிக்கலானவை, மேலும் அவற்றில் எண்ணற்ற தர்க்கரீதியான இணைப்புகள் உள்ளன. எனவே, யோவான் 3:16 க்கு ஒரு, ஒன்றுபட்ட அர்த்தம் உண்டு என்று நாம் சொல்வது சரிதான் என்றாலும், அந்த அர்த்தத்தின் சிக்கலானது நாம் அதை சுருக்கமாக்குவதையும் விஞ்சுகிறது. வெவ்வேறு வியாக்கியான அறிஞர்கள் அதன் ஒரே அர்த்தத்தின் வெவ்வேறு அம்சங்களை சரியாக வலியுறுத்த முடியும்.

வேதாகமத்தின் அர்த்தம் மிகவும் சிக்கலானது என்பதை நாம் காணத் தவறினால், அது எப்பொழுதும் நமது வியாக்கியானங்களை விஞ்சுகிறதாக இருக்கும், நாம் ஒரு தீவிர ஆபத்தில் இருப்போம். வேதாகமத்தைப் பற்றிய நமது வியாக்கியானத்தை வேதாகமத்தோடு மிக நெருக்கமாக அடையாளம் காணும் அபாயத்தை நாம் கொண்டுள்ளோம். நமது வியாக்கியானமானது வேதத்தின் அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறது, மேலும் நாம் வேதம் மட்டுமே என்கிற கோட்பாட்டை நிராகரிக்கிறோம், அதாவது வேதம் எப்போதும் நமது வியாக்கியானங்களுக்கு மேலே இருக்கிறது என்ற நம்பிக்கையை நிராகரிப்பதாக இருக்கும்.

வரம்பின் மையத்தில் ”சிக்கலான ஒரே அர்த்தம்” உள்ளது, இது ஆரம்பகால சீர்திருத்தக் கண்ணோட்டங்களுடன் ஒத்துப்போகிறது. *வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையானது* அத்தியாயம் 1, பிரிவு 9 இல் சிக்கலான ஒரு அர்த்தத்தை விவரிக்கிறது, அங்கு அது இந்த வார்த்தைகளைக் கூறுகிறது:

> வேதத்தில் உண்மையான மற்றும் முழு அர்த்தத்தைப் பற்றி ஒரு கேள்வி எழும்போது (இது பன்மடங்கு அல்ல, ஆனால் ஒன்று), அது இன்னும் தெளிவாக பேசும் மற்ற இடங்களால் தேடப்பட்டு அறியப்பட வேண்டும்.

இந்தக் கண்ணோட்டத்தில், ஒவ்வொரு வேத பகுதிக்கும் ஒரு அர்த்தம் உண்டு. ஆனால் இந்த ஒரு அர்த்தமானது சிக்கலானதும் பன்முகமானதுமாகும், வேதாகமத்தின் முழு போதனையாலும் நிறுவப்பட்ட பல பரஸ்பரங்களின் வலையால் வெளிப்படுத்தப்படுகிறது.

> மக்கள் "ஒர் அர்த்தம்" போன்ற ஒரு வார்த்தையை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்துகிறார்கள். இதனுடைய சிறப்பான அர்த்தம் என்னவென்றால், வேதாகமத்தின் ஒரே அர்த்தம் என்பது அதற்கு ஒரு மதிப்பு உள்ளது என்பதைக் குறிப்பதாகும், மேலும் அதன் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஒருங்கிணைந்த முக்கியத்துவம் உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஒற்றுமை சிக்கலானதாக இருக்கிறது. இது சிக்கலாக இருக்கிறது. இது எளிமையானது அல்ல. வேதத்தின் ஒவ்வொரு பகுதியும் சிக்கலானதாக இருப்பதால், ஒரு சொற்றொடர் அல்லது ஒரு வாக்கியத்தின் மூலம் ஒரு வேத பகுதியின் ஒரு அர்த்தத்தை நாம் சுருக்கமாகக் கூற முடியும் என்பது உண்மையல்ல. ஆனால் வேதத்தின் ஒவ்வொரு பகுதியும் ஒத்துப்போகிறது. ஒருங்கிணைப்பு என்று நாம் சொல்லும்போது அது ஒன்றாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அர்த்தப்படுத்துகிறோம். பல அர்த்தமுள்ள பதமானது, ஒருமைக்கு நேர்மாறானது, உண்மையில், வேதத்தில் உள்ள எந்த பகுதியும் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது என்று கருதுகிறது, இதனால் ஒரு குறிப்பிட்ட வேத பகுதியின் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி நீங்கள் கற்றுக்கொள்ளலாம். அந்த வேத பகுதியின் இந்த பல்வேறு மதிப்புகள் அல்லது முக்கியத்துவங்கள் ஏதேனும் ஒத்திசைவைக் கொண்டிருக்கின்றனவா என்பது ஒரு பொருட்டல்ல. ஆனால் உண்மை என்னவென்றால், ஒரு வேத பகுதி ஒரு அர்த்தத்தைத் தான் கொண்டுள்ளது என்பதை சுவிசேஷ சபையாராக இருக்கிற நாம் நம்புகிறோம், ஆனால் ஒரு எளிமையான ஒத்திசைவை நாம் நம்புவது அல்ல. இது ஒரு சிக்கலான ஒத்திசைவாகும். எனவே, வேதாகமத்துக்கும், வேதாகமத்தில் உள்ள எந்தப் பகுதிக்கும், ஒரு ஒருங்கிணைந்த அர்த்தம் உண்டு என்பதை நாம் உணர முடியும், அந்த அர்த்தத்தில், அது ஒத்திசைவுடையது.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

அர்த்தத்தை நாம் வழங்குவதற்குக் காத்திருப்பதற்குப் பதிலாக வேதாகமமே அதிகாரப்பூர்வமான அர்த்தத்தை அளிக்கிறது என்பதை சிக்கலான ஒத்திசைவின் சீர்திருத்தக் கருத்து உறுதிப்படுத்துகிறது. வேதாகமத்தை வேதத்தின் எளிமைப்படுத்தப்பட்ட நமது சுருக்கங்களின் மட்டத்திற்கு தாழ்த்துவதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. ஒவ்வொரு வேதாகம பகுதியும் அந்த வசனத்தை விளக்குவதற்கான நமது மிகச் சிறந்த முயற்சிகளுக்கு மேலாக அதிகாரபூர்வமாக நிற்கிறது. சிக்கலான ஒத்திசைவின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த கண்ணோட்டமானது, வேதவாக்கியத்தின் அர்த்தத்தைக் கையாள்வதற்கான ஒரு வழியை வழங்குகிறது, இது நமது நாளில் சீர்திருத்தத்த இறையியலை மேலும் மேம்படுத்த நமக்கு உதவும்.

வேதாகமம் தேவ ஆவியால் அருளப்படுதல் மற்றும் அதன் அர்த்தம் குறித்த தற்கால புராட்டஸ்டன்ட் கருத்துக்களைக் கருத்தில் கொள்வதன் மூலம் வேதாகமத்தின் அதிகாரத்தைப் பார்த்தோம். வேதாகமத்தின் தெளிவு குறித்த நவீன புராட்டஸ்டன்ட் கருத்துக்களைப் பற்றி பேசும் நிலையில் நாம் இப்போது இருக்கிறோம்.

## தெளிவு

ஒரு வரம்பில் மூன்று காரியங்களின் அடிப்படையில் சிந்திக்க இது மீண்டும் நமக்கு உதவும். ஒரு முனையில், நாம் தற்காலப் போக்குகள் முற்றிலும் தெளிவின்மையை நோக்கி செல்வதை காண்கிறோம். மறுமுனையில் நாம் முழுமையான தெளிவை நோக்கிய தற்காலப் போக்குகளை எதிர்கொள்கிறோம். ஆனால், நடுவில், தெளிவான சீர்திருத்தக் கோட்பாடானது உள்ளது.

> வேதத்தில் தெளிவு உள்ளது. அது நாம் புரிந்து கொள்ள எப்போதும் எளிதானது என்று இதற்கு அர்த்தம் இல்லை, பேதுரு கூட பவுல் எழுதிய சில விஷயங்கள் புரிந்து கொள்ள கடினமாக உள்ளன என்று கூறுகிறார், நாம் வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது கடினத்தின் ஆதாரம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் வரையறைக்குட்பட்ட உயிரினங்கள் தான் என்பது ஒரு கடினமான காரியமாகும் … எனவே, தேவனைப் போல இயல்பாகவே சிக்கலான ஒரு விஷயத்திற்கு நாம் வரும்போது, வேதாகமம் தெளிவாக இருந்தாலும், புரிந்துகொள்வது சில நேரங்களில் சவாலானதாகும். கடைசியான ஒரு முக்கிய காரியம் இருக்கிறது, மேலும் வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையும் இதைப் பற்றி பேசுகிறது. அதாவது இரட்சிப்பிற்கு அவசியமான காரியங்கள் வேதத்தில் தெளிவாக உள்ளன, இதனால் எளியவர்கள் கூட அவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

வேதத்தை கிட்டத்தட்ட முற்றிலும் தெளிவற்றதாக அல்லது நம்மிடமிருந்து மறைக்கப்பட்டதாக கருதும் புராட்டஸ்டன்ட்களைக் கண்டுபிடிப்பது இன்று கடினம் அல்ல. பெரும்பாலும், மறுகட்டமைப்பு மற்றும் பின்நவீனத்துவ வியாக்கியானவியல் ஆவியில், இந்த புராட்டஸ்டன்ட்கள் மற்ற எல்லா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இலக்கியங்களையும் பற்றி சிந்திக்கும் அதே வழியில் வேதவாக்கியத்தைப் பற்றி சிந்திக்கிறார்கள். மற்ற இலக்கியங்களைப் போலவே, வேதாகமத்தையும் தெளிவற்றதாக அவர்கள் கருதுகிறார்கள், ஏனென்றால் வேதாகமமானது சுய முரண்பாடானது என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்களின் பார்வையில், வேத வியாக்கியானத்தின் வரலாறு பல விளக்கவுரை சிரமங்களை வெளிப்படுத்தியுள்ளது, ஆகவே இன்று நாம் வேதத்தை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

வரம்பின் மறுமுனையில், சில தற்கால புராட்டஸ்டன்ட்கள் வேதத்தின் முழுமையான தெளிவை நம்புகிறார்கள். ஏறக்குறைய எல்லா வேதவாக்கியங்களையும் அவர்கள் விரைவாகவும் எளிதாகவும் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு மிகத் தெளிவாக அவர்கள் கருதுகிறார்கள். பெரும்பாலும், இத்தகைய கருத்துக்களை ஆதரிப்பவர்கள் தங்கள் மிகக் குறுகிய கிறிஸ்தவ சமூகங்களிலிருந்து வராத எல்லா வியாக்கியானங்களையும் வெறுமனே ஒதுக்கித் தள்ளுகிறார்கள்.

வேதாகமத்தின் தெளிவை மிகைப்படுத்துவது இன்று புராட்டஸ்டன்ட் மரபில் உள்ள பல இறையியலாளர்களுக்கு ஒரு பெரிய சோதனையாகும். நவீன சந்தேகவாதத்திலிருந்தும் அழுகைவாதத்திலிருந்தும் வேதாகமத்தை விலக்கி வைக்க நாம் தீவிரமாக விரும்புகிறோம். ஆனால் இந்த வழியில் வேதாகமத்தின் தெளிவை மிகைப்படுத்துவது வேதாகமத்தின் தெளிவு குறித்த சீர்திருத்தத்தின் கண்ணோட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தாது. நாம் ஏற்கெனவே பார்த்தபடி, வேதத்தின் சில பகுதிகளைப் புரிந்துகொள்வது சாத்தியமில்லாத காரியம் இல்லை என்றாலும், கடினம் என்று ஆரம்பகால சீர்திருத்தவாதிகள் ஒப்புக்கொண்டனர்.

வேதாகமத்தின் தெளிவு குறித்த நமது வரம்பின் நடுவில், தெளிவின் அளவுகளை ஒப்புக்கொள்ளும் ஒரு நிலைப்பாடு உள்ளது. வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையானது, அத்தியாயம் 1, பிரிவு 7 இல் இந்த நிலைப்பாடு தான் பின்வருவனவற்றில் ஏற்கப்பட்டுள்ளது:

> வேதத்தில் உள்ள யாவும் ஒரே மாதிரியாகத் தெளிவாகவோ, எல்லாருக்கும் ஒரே மாதிரியாகவோ இருப்பதில்லை; ஆயினும், அறியப்படவும், நம்பப்படவும், இரட்சிப்பிற்காக அனுசரிக்கப்படவும் அவசியமானவைகள் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டு, வேதத்தின் ஏதோ ஒரு இடத்திலாவது தெளிவாக இருக்கின்றன, கற்றறிந்தவர்கள் மட்டுமல்ல, கல்வியறிவற்றவர்களும், சாதாரண வழிமுறைகளை முறையாகப் பயன்படுத்தி அவைகளைப் பற்றிய போதுமான புரிதலை அடையலாம்.

விசுவாச அறிக்கையானது ஒரு இடத்தில் அல்லது வேறு இடத்தில் ”இரட்சிப்பிற்கு … அவசியமானதை வேறுபடுத்திக் காட்டுகிறது என்பதை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கவனியுங்கள்.” ஆனால் வேதாகமத்தில் உள்ள மற்ற அனைத்தும் சமமாக தெளிவாக இல்லை என்பதையும் அது ஒப்புக்கொள்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வேதம் முற்றிலும் தெளிவாக இல்லை அல்லது முற்றிலும் தெளிவற்றதாகவும் இல்லை.

முந்தைய பாடத்தில், வெவ்வேறு கிறிஸ்தவ போதனைகளில் நமக்குள்ள நம்பிக்கையின் பல்வேறு மட்டங்களை நாம் வேறுபடுத்திக் காட்டினோம் என்பதை நீங்கள் நினைவுகூருவீர்கள். நாம் ”நிச்சயத்தின் கூம்பு” என்று அழைத்த மாதிரியைப் பயன்படுத்தினோம். நமது நிச்சயத்தின் கூம்பினுடைய அடிப்பகுதியை நோக்கி, நாம் பலவீனமாக வைத்திருக்கும் நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறோம், ஏனென்றால் அவைகளில் நமக்கு குறைந்த அளவு நம்பிக்கை இருக்கிறது. மேலே, நாம் விடாப்பிடியாக வைத்திருக்கும் அந்த முக்கிய நம்பிக்கைகள் உள்ளன; அவைகளைக் கைவிடுவது கிறிஸ்தவ விசுவாசத்தைக் கைவிடுவதாகும். இந்த உச்சநிலைகளுக்கு இடையே நாம் பல்வேறு அளவு நம்பிக்கையுடன் நம்பும் மற்ற அனைத்தும் நம்மிடம் உள்ளன.

பல விதங்களில், வேதாகமத்தின் தெளிவைப் பற்றி இதேபோன்ற சொற்களில் சிந்திக்க இது உதவுகிறது. முதலாவதாக, இரட்சிப்புக்கு என்ன தேவை என்பதைப் பற்றிய அறிவு உட்பட வேதாகம போதனையின் பல அம்சங்களை புரிந்து கொள்ள சிறிய முயற்சி மட்டுமே போதும், எந்த அறிவார்ந்த முயற்சியும் தேவையில்லை. *வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கை* கூறுவதைப் போல, ”கற்றறிந்தவர்கள்” மற்றும் ”படிக்காதவர்கள்” இந்த விஷயங்களை ஒரே மாதிரியாக புரிந்து கொள்ளலாம். மற்ற வேதாகம தகவல்களும் இந்த வகைக்குள் பொருந்துகின்றன. சொல்லப்போனால், வேதத்தின் மகத்தான பகுதிகளைப் புரிந்துகொள்வது மிகவும் சுலபமானது. எடுத்துக்காட்டாக, தேவன் உலகத்தைப் படைத்தார் என்பதையோ, ஆபிரகாம், மோசே, தாவீது என்ற நபர்கள் இருந்தார்கள் என்பதோ, அல்லது இஸ்ரவேலர் எகிப்துக்குப் போய், பின்னர் நாடுகடத்தப்பட்டார்கள் என்பதையோ பார்ப்பது கடினமல்ல. இயேசு நாசரேத்தில் வளர்ந்தார் என்றும் அப்போஸ்தலர்கள் இருந்தார்கள் என்றும் புதிய ஏற்பாடு தெளிவாகக் கற்பிக்கிறது. வேதாகமத்தில் இது போன்ற எண்ணற்ற பிற அம்சங்கள் மிகவும் தெளிவாக இருப்பதால், அவற்றை அறிய யாரும் அறிவார்ந்த அல்லது கல்வி முயற்சிகளை முன்வைக்க வேண்டியதில்லை.

> வேதாகமத்தின் மிக அடிப்படையான சத்தியங்களைப் புரிந்துகொள்ள நமக்கு விசேஷமான வழிமுறைகள் தேவையா? இதற்கு பதில் ”இல்லை” என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் வேதாகமத்தின் பெரும்பகுதி மிகவும் தெளிவாக உள்ளது … பேதுரு நமக்குச் சொல்லுகிறபடி, தேவன் தம்முடைய வல்லமையையும் இருப்பையும் நமக்கும், ஜீவன், தேவபக்தி, இரட்சிப்பு என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் தெளிவாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெளிப்படுத்தியுள்ளார், ஏனென்றால் அவர் தம்முடைய நற்குணத்தினாலே நம்மை அழைத்திருக்கிறார். அல்லது, வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையானது, அத்தியாயம் 1, பிரிவு 6 இல் கூறுவதைப் போல, ”அவருடைய சொந்த மகிமை, மனிதனின் இரட்சிப்பு, விசுவாசம் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் குறித்து தேவனுடைய முழு ஆலோசனையும் வேதவசனத்தில் வெளிப்படையாக அமைக்கப்பட்டுள்ளது, அல்லது நல்ல மற்றும் அவசியமான விளைவுகளால் வேதாகமத்திலிருந்து ஊகிக்கப்படுகிறது.” எனவே, எந்த ஒரு சாதாரண நபரும், அவர்கள் ஒரு வேத அறிஞர் இல்லை என்றாலும் கூட, சரியான முறைகளை பயன்படுத்தியும் பல்வேறு இலக்கிய நடைகள் மற்றும் தேவன் நமக்கு வழங்கிய அடிப்படை அறிவின் படியும் வேதத்தை புரிந்து கொள்ள முடியும் … வேதத்தில் உள்ள சில பகுதிகளைப் புரிந்துகொள்வது கடினம் என்பதைக் குறித்து ஆச்சரியப்படவில்லை, ஆனால் குறிப்பாக தெளிவான மற்றும் வெளிப்படையான பகுதிகள் பிரகடனப்படுத்தும் சத்தியத்தையும் இரட்சிப்பையும் குறித்து ஆச்சரியப்படுவதாக ஒருவர் ஒருமுறை கூறினார். அதைத்தான் அவர்கள் அதிர்ச்சியாக உணர்ந்தனர். எனவே, இரட்சிப்பைப் பற்றி விவாதிக்கும் வேதத்தின் பகுதிகள், மனிதனின் பாவத்தைப் பற்றி விவாதிக்கும் பல வசனங்கள், கிறிஸ்துவுக்குள் தேவன் கொடுக்கும் இரட்சிப்பு, மற்றும் அவரது வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றை யாரோ ஒருவர் வாசிக்க முடிந்தால், அல்லது வேறொருவர் வாசிப்பதைக் கேட்க முடிந்தால், அவைகளை புரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

– Dr. பியாவோ சென், மொழிபெயர்ப்பு

இரண்டாவதாக, வேதாகமத்தின் சில அம்சங்கள் பண்டைய வரலாறு, உரை விமர்சனம், வேதாகம மொழிகள், விளக்க முறைகள் அல்லது இறையியல் போன்ற பாடங்களைப் படிக்கும் தீவிர மாணவர்களால் மட்டுமே அறியப்படுகின்றன. இந்தக் காரியங்களில் பவுலின் தீர்க்கதரிசனம், அல்லது ஆதியாகமம் புஸ்தகத்தின் வரலாற்று நோக்கம் போன்ற காரியங்களை நாம் எண்ணலாம். வேதாகமத்தின் இந்த மற்றும் பிற அம்சங்களுக்கு அதிக அறிவார்ந்த கவனம் தேவைப்படுகிறது. ஆனால் போதுமான கல்வி முயற்சிகளால், ஆரம்பத்தில் தெளிவற்றதாகத் தோன்றும் பல விஷயங்கள் நமக்குத் தெளிவாகின்றன.

இறுதியாக, வேதாகமத்தின் சில பகுதிகள் நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் தெளிவில்லாமல் இருப்பதாகத் தோன்றுகிறது. வேதாகமத்தின் இந்தப் பரிமாணங்களின் மிகவும் வெளிப்படையான சில உதாரணங்கள், சாமுவேல், இராஜாக்கள், நாளாகமங்கள் அல்லது புதிய ஏற்பாட்டு சுவிசேஷங்கள் போன்ற வேதாகமத்தின் இணையான பகுதிகளை ஒத்திசைக்க நாம் முயற்சிக்கும்போது எழுகின்றன. இந்தப் பகுதிகளில் பெரும் வளர்ச்சிகள் ஏற்பட்டிருந்தாலும், பல பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்பட முடியாததாகத் தோன்றுகின்றன.

ஆகவே, நாம் வேதாகமத்தை அணுகுகையில், வேதாகமத்தின் சில பரிமாணங்கள் மற்றவைகளை விடத் தெளிவானவை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த யதார்த்தத்தை நாம் எதிர்கொள்ளும்போது மட்டுமே வேதாகமத்தின் அதிகாரத்தை பொறுப்புடன் கையாள முடியும். வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியும் சந்தேகத்திற்கு இடமின்றி அதிகாரப்பூர்வமானது என்பது உண்மைதான். ஆனால், ஒரு நடைமுறை மட்டத்தில், வேதாகமத்தின் வெவ்வேறு பாகங்களின் ஒப்பீட்டுத் தெளிவைப் பொறுத்து, அதன் அதிகாரப்பூர்வ வழிகாட்டுதலை வெவ்வேறு அளவுகளில் நாம் புரிந்துகொண்டு பயன்படுத்த முடிகிறது. எனவே, நமது காலத்தில் சீர்திருத்த மரபை நிலைநிறுத்துவதற்கு, வேதவாக்கியங்களின் தெளிவு குறித்த தற்கால உச்சநிலைகளை நாம் தவிர்க்க வேண்டும், தெளிவு என்பது ஒரு அளவுக்குரிய விஷயம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

வேதவாக்கியத்தின் அதிகாரத்தைப் பற்றிய இந்த தற்கால புராட்டஸ்டன்ட் முன்னோக்குகளை மனதில் கொண்டு, இன்றைய இறையியலில் திருச்சபையின் அதிகாரத்தின் மீது நம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

## சபையின் அதிகாரம்

நாம் மீண்டும் இரண்டு திசைகளில் கவனம் செலுத்துவோம்: முதலாவதாக, தற்கால புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் கடந்த காலத்தில் இருந்த திருச்சபை அதிகாரங்களை எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்; இரண்டாவதாக, அவர்கள் தற்கால புராட்டஸ்டன்ட் அதிகாரங்களை எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதை நாம் பார்ப்போம். கடந்த காலத்தில் இருந்த சபையின் அதிகாரத்தை முதலில் பார்ப்போம்.

### கடந்த கால அதிகாரங்கள்

நாம் ஏற்கனவே பார்த்தபடி, பரிசுத்த ஆவியானவர் தங்கள் காலத்திற்கு முன்பே சபைக்கு பல சத்தியங்களைக் கற்பித்தார் என்பதை ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் புரிந்துகொண்டனர். இதன் விளைவாக, அவர்கள் ஆரம்பகால திருச்சபை பிதாக்களின் போதனைகள், நம்பிக்கைகள் மற்றும் திருச்சபையின் நீண்டகால மரபுகள் ஆகியவற்றிற்கு சரியான மரியாதை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொடுப்பதை பராமரிக்க முயன்றனர். உண்மையில், ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் திருச்சபையின் போதனைகளை தற்காலிக நியாயத்தீர்ப்புகளாக ஏற்றுக்கொண்டனர். ஆயினும்கூட, சபையின் போதனைகள் மீது வேதாகமத்தின் மேலாதிக்கத்தை வலுவாக உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்கள் இந்த நடைமுறையை சமன் செய்தனர். அவர்கள் கடந்த காலத்தை நம்பி, கட்டியெழுப்பினார்கள், ஆனால் சபையின் எல்லா போதனைகளையும் வேதாகமத்தின் கேள்விக்கிடமற்ற தராதரத்திற்கு உட்படுத்தினார்கள்.

துரதிருஷ்டவசமாக, இன்றைய இறையியலாளர்களுக்கு இந்த ஆரம்பகால புராட்டஸ்டன்ட் நிலைப்பாட்டின் இரு பக்கங்களையும் உறுதியாகப் பற்றிக்கொள்வது சில நேரங்களில் கடினமாக இருக்கிறது. சிலர் பாரம்பரியத்தின் பக்கம் பெரிதும் சாய்கிறார்கள். மற்றவர்கள் வேதவாதத்தை நோக்கி நகர்கிறார்கள். ஆனால் புராட்டஸ்டன்ட் மரபில் பலர் இந்த உச்சநிலைகளுக்கு இடையில் இருக்கிற *எப்போதும் சீர்திருத்தம் அடைந்து கொண்டு இருக்கும் நிலையை* பின்பற்றுகின்றனர்.

ஒரு புறம், சில சமகால இறையியலாளர்கள் "பாரம்பரியவாதம்" என்ற வலையில் விழுகிறார்கள். பாரம்பரியவாதத்தின் மூலம், இடைக்கால ரோம கத்தோலிக்க பாரம்பரியவாதத்தை நெருக்கமாக ஒத்திருக்கும் நடைமுறைகளை நோக்கி அவர்கள் வழிதவறிச் செல்கிறார்கள் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். இப்போது, புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் வேதாகமத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறார்கள், மேலும் அவர்கள் நிச்சயமாக கத்தோலிக்கத்தின் மரபுகளை நிராகரிக்கிறார்கள். ஆனால் பல முறை, பாரம்பரியவாதிகள் தங்கள் விசுவாசத்தின் கடந்தகால வெளிப்பாடுகளை மிகவும் உயர்வாக பொக்கிஷமாக வைத்திருக்கிறார்கள், நடைமுறை மட்டத்தில், அவர்கள் கடந்த காலத்தை போதுமான அளவு ஆராயத் தவறிவிடுகிறார்கள்.

> இது ஒரு வகையான முரண்பாடாக இருக்கிறது, ஏனென்றால் புராட்டஸ்டன்ட்களாகிய நாம் ஒரு வேதாகமத்திற்கு சமமான ஒரு சபை பாரம்பரியம் என்ற கருத்தை எதிர்க்கிறோம். இன்னும், நடைமுறையில் நாம் சில நேரங்களில் அதை செய்கிறோம். பெல்ஜிக், அல்லது ஹைடெல்பெர்க், அல்லது நம்மில் பலருக்கு, வெஸ்ட்மின்ஸ்டர் போன்ற சபையின் ஒரு குறிப்பிட்ட விசுவாச அறிக்கையை வலியுறுத்தும் நபர்களை நீங்கள் அறிந்திருக்கலாம். அது உண்மையில் வேதாகமம் போன்ற அதிகாரம் ஆகும். ஆயினும்கூட, வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையின் முதல் அத்தியாயத்தில், அது அனைத்து சபை ஆலோசனை சங்கங்களிலும், அனைத்து சபை இறையியல் வாதங்களிலும் வேதாகமமே இறுதி அதிகாரம் என்று கூறுகிறது ... பாரம்பரியம் ஒரு நல்ல



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வழிகாட்டி, ஆனால் அது ஒரு பயங்கரமான ஆட்சியாளன் ஆகும். நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய ஊழியத்தில் ஒரு பங்கைக் கொண்டிருக்கிறோம், நாம் வேதாகமத்தின் கதையை ஒரு தனித்துவமான வழியில் உருவகப்படுத்த வேண்டும், மற்றவைகளின் உதாரணத்திலிருந்து, பாரம்பரியத்தின் முன்மாதிரியிலிருந்து பயனடைகிறோம், ஆனால் அது ஆளுகிறதாக இருக்கக்கூடாது.

– Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

மறுபுறம், சில நவீன இறையியலாளர்கள் கடந்த காலத்திலிருந்து திருச்சபை அதிகாரத்தைக் கையாளும்போது எதிர் முனைக்குச் செல்கிறார்கள். அறிவொளி நவீனத்துவத்தின் ஒரு கிறிஸ்தவ பதிப்பில், அவை ”வேதாகமவாதம்” என்று அழைக்கப்படக்கூடியவற்றில் விழுகின்றன. கடந்த கால புராட்டஸ்டன்ட் பாரம்பரியத்தின் உதவியின்றி ஒவ்வொரு நபரும் வேதத்திற்கு வந்து ஒவ்வொரு இறையியல் பிரச்சனையையும் தீர்மானிக்க வேண்டும் என்பது போல இந்த இறையியலாளர்கள் செயல்படுகிறார்கள்.

சீர்திருத்தவாதிகளும், கிறிஸ்தவர்களும் காலங்காலமாக, வேதாகமத்தை தெய்வீக வெளிப்பாட்டிற்கு ஆதாரமாகவும் சாட்சியாகவும் அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் இந்த மரபுகள் தேவையில்லை என்றும் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் எந்த பாரம்பரியத்தையும் பின்பற்றுவதில்லை என்றும் அர்த்தமல்ல. எனவே, வேதம் மட்டுமே என்பது வேதத்தைப் படிப்பதைத் தவிர மற்ற எல்லா அறிக்கைகளையும் நிராகரிப்பதைக் குறிக்கும் என்ற இந்த கருத்தை சீர்திருத்தவாதிகள் அர்த்தப்படுத்தவோ அல்லது முன்னிலைப்படுத்தவோ இல்லை.

– Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

”சபை என்ன சொன்னாலும் பரவாயில்லை. வேதம் என்ன சொல்கிறது என்பதைப் பற்றி மட்டுமே நான் கவலைப்படுகிறேன்” என்று மீண்டும் மீண்டும், புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் பாரம்பரியவாதத்திற்கு எதிர்வினையாற்றினார்கள். இந்த வகையான சொல்லாட்சியானது, நமது இறுதி அதிகாரமாக வேதாகமத்திற்கு அடிபணிவதைத் தாண்டி வெகுதூரம் செல்கிறது. தேவனுடைய ஆவியானவர் சபைக்கு வழங்கிய ஞானத்தை அது புறக்கணிக்கிறது. அதற்கு பதிலாக, அது தற்போது பணியில் இருக்கும் தனிநபர் அல்லது தனிநபர்களின் குழுக்களுக்கு மட்டுமே இறையியல் தீர்ப்பை வழங்குகிறது.

இன்று சீர்திருத்த உணர்வில் தொடர, *எப்போதும் சீர்திருத்தம் அடைந்து கொண்டு இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை* நாம் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். சீர்திருத்த மரபின் முக்கியத்துவத்தைப் புறந்தள்ளாமல் வேதாகமத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும்.

இன்று நாம் ஆரம்பகால திருச்சபை பிதாக்களையும் ஆலோசனை சங்கங்களையும் மட்டுமன்றி, நமது சொந்த ஒப்புதல் வாக்குமூலங்களையும் மரபுகளையும் தற்காலிக நியாயத்தீர்ப்புகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று *எப்போதும் சீர்திருத்தம் அடைந்து கொண்டு இருக்க வேண்டும் என்கிற நிலைப்பாடு* கோருகிறது. ஆனால் கடந்த காலத்தில் இருந்த இந்த அதிகாரங்கள் எப்பொழுதும் வேதாகமத்தின் கேள்விக்கிடமற்ற போதனைக்கு உட்பட்டிருக்க வேண்டும். இன்று சீர்திருத்தத்தை மேலும் மேம்படுத்துவதற்கு, வேதாகமத்தின் அதிகாரத்தின் கீழ் கடந்த காலத்திலிருந்த திருச்சபை அதிகாரங்களுக்கு இந்த வகையான மதிப்பை எவ்வாறு கொடுப்பது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

> எப்போதும் சீர்திருத்தம் அடைந்து கொண்டு இருக்க வேண்டும் என்ற கருத்து உண்மையில் சீர்திருத்தப்பட்ட சபையானது எப்போதும் சீர்திருத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்கிறது. அது ஏன் முக்கியமானது என்பதற்கான காரணம், அது தொடர்புகொள்வதற்கான ஒரு வழியாகும், சபையானது எப்போதும் வேதாகமத்தின் அதிகாரத்தின் கீழ் நிற்கிறது என்பதை கூறுவதால் இது முக்கியமானதாக இருக்கிறது. எனவே, நம் நடைமுறைகளில் நாம் வேதாகம சாட்சிக்கு வெளியே வாழ்கிறோம் என்பதைக் கண்டுபிடிக்கும் எந்த நேரத்திலும், நாம் சீர்திருத்த**ம்** பெற தயாராக இருக்க வேண்டும்… எனவே, திருச்சபை எப்போதும் சீர்திருத்தமடைய தயாராக இருப்பது ஒரு முக்கியமான யோசனையாகும், நாம் வேதாகமத்தின் கீழ் நிற்கிறோம்; வேதாகமத்தைப் பற்றிய நமது விளக்கங்களைக் கூடச் சோதிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். ஆனால் எந்த நேரத்திலும் பிரபலமாக இருக்கும் எதையும் நாம் கடந்து செல்ல முடியாது. அதனால்தான், சபை எப்போதும் சீர்திருத்தப்படுவதற்கு, நாம் கடந்த காலத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்தவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். தேவனுடைய ஆவியானவர் கடந்த காலத்தில் எப்படி வேலை செய்தார் என்பதை அறிய வேண்டும், அதனால் இன்று நாம் என்ன சொல்கிறோமோ, அது தேவன் எப்போதும் கற்பித்து வந்ததற்கும், அவர் யுகங்கள் வழியாக தனது சபையை எவ்வாறு வழிநடத்துகிறார் என்பதற்குள்ளும் விழுகிறது?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். ஆகையால் புதிதாக ஒரு மதத்தை தொடங்காமல், நாம் வேதாகமத்தின் கீழ் சீர்திருத்தம் அடையவும், நம் வாழ்க்கையை சீர்திருத்தவும், நம் எண்ணங்களை சீர்திருத்தவும் நாம் தயாராக இருக்கிறோம் ஏனென்றால் நாம் பிதாவாகிய தேவன், குமாரன் மற்றும் ஆவியானவரின் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம்.

– Dr. கெல்லி எம். காபிக்

சபையின் அதிகாரத்தையும், தற்கால புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் கடந்தகால அதிகாரங்களுடன் தொடர்புபடுத்திய விதத்தையும் பார்த்த பிறகு, நாம் அவைகளுக்கு சமமான முக்கியமான வேறொரு விஷயத்திற்குத் திரும்ப வேண்டும். இன்றைய இறையியலாளர்கள் தற்கால புராட்டஸ்டன்ட் அதிகாரங்களை எவ்வாறு மதிப்பிட வேண்டும்? நம் நாளில் வளர்ந்து வரும் இறையியல் சூத்திரங்களின் அதிகாரத்தை நாம் எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்?

## தற்கால அதிகாரங்கள்

ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் தங்கள் காலத்தில் முறையாக நியமிக்கப்பட்ட தலைவர்களால் உருவாக்கப்பட்ட இறையியலின் மதிப்பை உறுதிப்படுத்தினர். ஆனால் அவர்கள் வேதாகமத்தின் போதனைக்கு மேலாக சபையில் தற்கால அதிகாரங்கள் உயர்த்தப்படுவதற்கு எதிராகவும் செயல்பட்டு பாதுகாத்தனர். துரதிருஷ்டவசமாக, மீண்டும் ஒருமுறை, தற்கால புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் இந்த ஆரம்பகால கண்ணோட்டங்களைப் பின்பற்றுவது பெரும்பாலும் கடினமாக உள்ளது. அவர்கள் தங்கள் நாளில் வாழும் புராட்டஸ்டன்ட் இறையியலாளர்களைப் புரிந்துகொள்ளும் வழிகளில் உச்சத்திற்குச் செல்ல முனைகிறார்கள்.

ஒரு புறம், சில இறையியலாளர்கள் இன்று கோட்பாட்டு சூத்திரங்களைப் பற்றி சந்தேகப்படுகிறார்கள். மறுபுறம், பலர் நம் காலத்தில் உள்ள கோட்பாட்டு சூத்திரங்களைப் பற்றி பிடிவாதமாக இருக்கிறார்கள். ஆனால் உண்மையான சீர்திருத்த இறையியலின் வழியானது, விசுவாசமான கோட்பாட்டு சூத்திரங்களுக்காகப் பாடுபடுவதாகும். சமகால கோட்பாட்டு சூத்திரங்களைப் பற்றி கடுமையான சந்தேகம் கொண்ட இறையியலாளர்கள், இன்று திருச்சபை என்ன சொல்கிறதோ அதற்கு அடிபணிய வேண்டிய அனைத்து அதிகார உணர்வையும் அல்லது கீழ்ப்படிதலின் அவசியத்தையும் நிராகரிக்கின்றனர். வரம்பின் மறுமுனையில், மிகவும் பிடிவாதமாக இருக்கும் இறையியலாளர்கள் தற்கால சூத்திரங்கள் சரியானவை என்று வலியுறுத்துகின்றனர்.

தற்கால கிறிஸ்தவ நம்பிக்கைகளை மதிப்பிடும் வழிகளைப் பற்றி நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒருபுறம்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சுவிசேஷ கிறிஸ்தவர்களிடையே அடிக்கடி வளரும் ஒரு சந்தேகம் உள்ளது, அது புதியது என்று ஏதாவது இருந்தால் அது உண்மை அல்ல என்று அவர்கள் கருதுகின்றனர். உண்மையானது கடந்த காலத்தில் மட்டுமே இருந்தது என்று கூறுகிறார்கள். மேலும் துரதிருஷ்டவசமாக, பரிசுத்த ஆவியானவர் இன்னும் கடந்த காலத்தில் செயல்பட்டதைப் போலவே இன்றும் செயல்படுகிறார் என்று அவர்கள் நம்பவில்லை என்ற உண்மையை இது வெளிப்படுத்துகிறது … மறுபுறம், ”சரி, அது பழைய பாணியில் இருக்கிறது என்றால், அது கடந்த காலத்தில் இருந்து வருகிறது என்றால், அது இன்று பொருத்தமற்றது. நமக்குத் தேவையானது சில புதிய யோசனைகள்தான்” என்று சொல்கிற மக்களைக் காண முடியும். பரிசுத்த ஆவியானவர் இன்று மட்டும் சபையில் கிரியை நடப்பிக்கவில்லை என்பதால் நாம் அந்த பாதையில் செல்லக்கூடாது; அவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சபையில் கிரியை நடப்பித்து வருகிறார். எனவே, கடந்த காலத்தில் உண்மை இருக்கிறது என்பதை நாம் உணரும்போது, கடந்த காலத்திலிருந்த அந்த உண்மையை நாம் கட்டியெழுப்ப வேண்டும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இருக்கிற சபையின் வியாக்கியானங்கள் இன்று நம் நாளில் நாம் சிந்திக்கும் மற்றும் வாழும் வழிகளில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இறையியலானது பரிசுத்த ஆவியின் மீது சார்ந்திருக்க வேண்டும், வேதாகமத்தைக் கற்றுக்கொள்வதற்கும், கடந்த காலத்தில் அவர் சபைக்கு கொடுத்த ஞானத்துடன் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் நமக்கு உதவுகிறது, மேலும் இன்று நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு பொருத்தமானதாகவும் இருக்கிறது.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

நமது நாளில் நாம் எதிர்கொள்ளும் கடுமையான சந்தேகவாதமும் வறட்டுப் பிடிவாதமும் ஓரளவு நிலவுகின்றன, ஏனெனில் கோட்பாட்டு அறிக்கைகள் பெரும்பாலும் வெறுமனே உண்மை என்றோ அல்லது பொய் என்றோ கருதப்படுகின்றன. உண்மையில், உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான சாத்தியக்கூறுகளின் வரம்பைக் கருத்தில் கொள்வதன் மூலம் விசுவாசமான கோட்பாட்டு சூத்திரங்களை உருவாக்குவது மிகவும் உதவியாக இருக்கும். எல்லா இறையியல் கூற்றுகளும் வேதவசனத்தின் தவறாத போதனையை எவ்வளவு நெருக்கமாகப் பிரதிபலிக்கின்றன என்பதைப்

பொறுத்து ஏறக்குறைய உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ இருக்கின்றன.

ஒரு புறம், சந்தேகத்திற்கிடமான கண்ணோட்டத்திற்கு மாறாக, சில இறையியல் நிலைப்பாடுகள் வேதாகமத்தின் போதனைகளை நாம் உண்மை என்று அழைத்து, அவற்றை மதிப்புமிக்கதாகக் கருதும் அளவுக்கு நன்கு விவரிக்கின்றன என்பதை நாம் காண்கிறோம். இப்போது, இந்த அறிக்கைகள் நிச்சயமாக பூரணமானவை அல்ல. வெளிப்படுத்தும் சில தகுதிகள் எழாவிட்டால், அவை உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்படும் அளவுக்கு நெருக்கமாக உள்ளன.

மறுபுறம், சில இறையியல் நிலைப்பாடுகள் வேதாகமத்தின் போதனையிலிருந்து வெகு தொலைவில் உள்ளன, அவற்றை தவறானவை என்று முத்திரை குத்துவது சரிதான். தற்கால சூத்திரங்களின் அதிகாரத்துடன் பிடிவாதமாக ஒட்டிக்கொள்பவைகளைப் போலல்லாமல், சில தகுதிகள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை என்பதைக் காட்டாவிட்டால் அந்த சூத்திரங்களை நாம் நிராகரிக்கலாம்.

எடுத்துக்காட்டாக, ”தேவன் எல்லாவற்றிற்கும் சர்வாதிகாரியாயிருக்கிறார்” என்று கூறும் ஒரு சமகால கோட்பாட்டு சூத்திரத்தைக் கவனியுங்கள். இது உண்மை என்று சொல்வதில் நமக்கு பொதுவாக எந்தப் பிரச்சனையும் இருக்கக் கூடாது. தேவன் தம்முடைய சிருஷ்டிகள் அனைத்தின்மேலும் சர்வாதிகாரியாயிருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது. ஆயினும்கூட, இந்தக் கூற்றை மேம்படுத்த முடியும் என்பதால், ஏதோ ஒரு அர்த்தத்தில் அது பூரணமில்லாமல் இருக்கிறது. ஒருவேளை, நாம் வேதாகம விசுவாசத்தை தேவன் உலகத்தை விட்டு ஒதுங்கி இருக்கிறார் என்பதை நம்பும் இறையுண்மைக் கோட்பாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டினால், இந்த அறிக்கை உண்மையில் ஒரு தவறான தோற்றத்தைக் கொடுக்கக்கூடும். தேவன் அவரது சர்வாதிகாரத்துவத்தில், அவரது சிருஷ்டிப்பின் ஆரம்ப செயலுக்குப் பிறகு வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புகொள்வதில்லை என்று தேவன் உலகத்தை விட்டு ஒதுங்கி இருக்கிறார் என்பதை நம்பும் இறையுண்மைக் கோட்பாடு போதிக்கிறது. எனவே, ”தேவன் எல்லாவற்றின் மீதும் சர்வாதிகாரமுள்ளவர்” என்ற கூற்று உண்மையில் தேவன் தனது சிருஷ்டிப்புடன் நெருக்கமாக இருக்கிறார் என்கிற தெய்வீக பராமரிப்பிலிருந்து யதார்த்தத்திலிருந்து நம்மை வழிவிலக செய்யும்.

இறுதியில், தற்கால இறையியல் சூத்திரங்களைப் பொறுத்தவரை, சில இறையியல் கூற்றுகள் வேதவாக்கியத்திற்கு நெருக்கமாக உள்ளதால் சரியான உபதேசங்கள் என்று எண்ணப்படுகின்றன; மற்றவைகள் வேதவாக்கியத்திலிருந்து நெருக்கமாக இல்லாததால் தவறான உபதேசங்கள் என்று எண்ணப்படுகின்றன. எது எப்படியாயினும், வறட்டுப் பிடிவாதமாக இருப்பதும், சமகால சூத்திரங்கள் அனைத்தும் உண்மை என்று அனுமானிப்பதும் நமக்குப் பயனளிக்காது. ஆனால் தற்கால சபை

அதிகாரத்தின் மதிப்பை சந்தேகிப்பதும் புறக்கணிப்பதும் கூட உதவாது. அனைத்து இறையியல் சூத்திரங்களும் *மேம்படுத்தப்படலாம், ஆனால் அவை நம் நாளில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதால் அவற்றை நாம் வெறுமனே புறக்கணிக்கக்கூடாது.* இது ஆரம்பகால சீர்திருத்த சொற்றொடரான ”எப்போதும் சீர்திருத்தம் அடைந்து கொண்டு இருக்க வேண்டும்” என்கிற கோட்பாட்டைத் தவிர வேறொன்றுமில்லை.

தற்கால புராட்டஸ்டன்ட் இறையியலின் நோக்கமானது விசுவாசமான இறையியல் சூத்திரங்களை உருவாக்குவதாகும் என்று நாம் சொல்லும்போது இதைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். உண்மையுள்ள கோட்பாட்டு சூத்திரங்களை வளர்ப்பதற்கு, தேவன் நமக்குக் கொடுத்துள்ள எல்லா வளங்களான வேதாகமத்தின் விளக்கவுரை, சமூகத்துடனான நமது தொடர்பு, கிறிஸ்தவ வாழ்க்கை ஆகியவற்றை நாம் தாழ்மையோடும் பொறுப்புடனும் பயன்படுத்துகிறோம். நம்முடைய போதனைகளை, இயன்றவரை, வேதாகமத்தின் போதனைகளுக்கு இணங்க நாம் முயல்கிறோம். நம்முடைய போதனைகள் வேதவசனங்களுக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அவைகளுக்கு அதிக அதிகாரம் இருக்கிறது. அவைகள் வேதத்திலிருந்து தொலைவில் இருந்தால், அவைகளுக்கு குறைந்த அதிகாரமே இருக்கும். ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும், சபையின் இறையியலானது எப்பொழுதும் வேதாகமத்திற்குக் கீழ்ப்பட்டு இருக்க வேண்டும்.

# முடிவுரை

இந்த பாடத்தில் நாம் இறையியலில் வேதாகம மற்றும் திருச்சபை அதிகாரத்திற்கு இடையிலான உறவை ஆராய்ந்துள்ளோம். இடைக்கால ரோமன் கத்தோலிக்கத்தின் காலத்தில் உருவான பல கண்ணோட்டங்களைப் பார்த்தோம். ஆரம்பகால புராட்டஸ்டன்ட் இயக்கம் இந்த கருத்துக்களை எவ்வாறு சரிசெய்தது என்பதையும் நாம் பார்த்தோம். இறுதியாக, தற்கால புராட்டஸ்டன்ட் இயக்கத்தில் வேதாகம மற்றும் திருச்சபை அதிகாரத்திற்கு சீர்திருத்தத்தின் கண்ணோட்டங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை நாம் ஆராய்ந்துள்ளோம்.

ஒரு கிறிஸ்தவ இறையியலைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் வேதவாக்கியத்தின் அதிகாரம் மற்றும் திருச்சபையின் அதிகாரத்துடன் மல்யுத்தம் செய்ய வேண்டும். இந்தப் பாடத்தில் நாம் கண்டபடி, வேதாகமத்தின் முழுமையான, கேள்விக்கிடமற்ற அதிகாரத்தை நாம் வலுவான சொற்களில் மீண்டும் உறுதிப்படுத்தாவிட்டால், சத்தியத்திலிருந்து வழிதவறிச் சென்று விடுவோம். இதுதான் நமது பாதுகாப்பாகும், இறையியலில் நமது உறுதியான நங்கூரம் அது தான். அதே நேரத்தில், தேவன் தம்முடைய சபையில் செய்ததை

நாம் ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது. எங்களுக்கு முன் சென்றவர்கள் பரிபூரணமானவர்கள் அல்ல. இன்று திருச்சபையின் போதகர்கள் பரிபூரணமானவர்கள் அல்ல. ஆயினும், அவர்கள் எவ்வளவு தவறானவர்களாக இருந்தாலும், நாம் கனம்பண்ண வேண்டிய அதிகாரங்களை தேவன் சபையில் ஸ்தாபித்திருக்கிறார். இந்த நியமங்களை நாம் மனதில் வைத்திருந்தால், கடந்த காலத்திலும் நமது சொந்த நாளிலும் கிறிஸ்தவ இறையியலைப் பாதித்த பல பிரச்சனைகளை நம்மால் தவிர்க்க முடியும். கிறிஸ்துவின் சரீரத்திற்குச் சேவை செய்து, தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும் இறையியலை நாம் கட்டியெழுப்ப முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.